விலை ரூபா: 7.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பதின்னான்கு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஐப்பசி 17 | செவ்வாய்க்கிழமை | (02.11.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 319

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சீமெந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## அரசிடமிருந்து நல்ல தகவலை அகாஷி எடுத்து வரவில்லை

### சு.ப.தமிழ்ச்செல்வன் பேட்டி

ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி இலங்கை அரசாங்கத்திடமிருந்து ஆக்கபூர்வமான செய்திகள் எதனையும் வன்னிக்கு எடுத்துவரவில்லையென விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் ஜப்பானிய இராஜதந்திரிகளுக்கும் இடையில் சுமார் 2 மணிநேரம் சந்திப்பு நடைபெற்றது.

இச்சந்திப்பில் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக ஆராயப்பட்டதோடு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாஷி மேற்கொண்ட பேச்சுவார்த்தை தொடர்பாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இச்சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சமாதானப் பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டியதன் அவசியம் பற்றியும் அதற்கு முன்னதாக தன்னாட்சியுள்ள இடைக்கால நிர்வாகத்தின் அவசியம் பற்றியும் முக்கியமாக தாங்கள் வலியுறுத்தியதாகக் கூறினார். சமாதான சூழ்நிலை உருவாகி இரண்டு வருடங்கள் கடந்துவிட்டபோதிலும் அது

(14 ஆம் பக்கம் பார்க்க)



## ஆளுநரின் விஜயம் திடீர் ரத்து

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனாவின் யாழ்ப்பாண விஜயம் திடீரென இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு நாளையதினம் இவர் யாழ்ப்பாணம் வருகைதரவிருந்தார்.

இவரது விஜயத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து பொது

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய இராணுவத்தளபதி நேற்று கொழும்பு வந்தார்

(கொழும்பு)

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் நிர்மல் சந்தர்விஜ் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு நேற்றுப் பிற்பகல் கொழும்பை வந்தடைந்தார்.

இவர் இராணுவத் தளபதி சாந்தகொட்டேகொடவை இராணுவத் தலைமையகத்தில் வைத்து சந்தித்துக் கலந்துரை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு யுத்தம் தீர்வல்ல

# புலிகளுடன் சமாதானப் பேச்சு மீண்டும் ஆரம்பிக்கப்படும்!

### ஜனாதிபதி சந்திரிகா உறுதிபடத் தெரிவிப்பு

(நமது நிருபர்)

***அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தற்பொழுது சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறாவிட்டாலும் அதனை மீண்டும் ஆரம்பித்து சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.***

தேசிய ஆலோசனைக் கவுன்சிலின் முதலாவது அரசியல் குழுக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆலோசனைக் கவுன்சிலின் முதலாவது கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கியதில் இருவர் ஸ்தலத்தில் பலி!


### உடுவிலில் நள்ளிரவில் பரபரப்பு

உடுவில் பகுதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவுவேளை மின்சாரம் தாக்கியதில் இருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர்.

தாளையடி திருநெல்வேலியைச் சேர்ந்த பரமசாமி ஆனந்தபாபு (வயது 19), மல்வம் உடுவிலைச் சேர்ந்த கந்தசாமி மோகன் (வயது 27) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் நள்ளிரவுவேளை உடுவில் முருகமூர்த்தி கோவிலுக்கு அண்மையிலுள்ள கோழிப்பண்ணை ஒன்றின் அருகே பிரஸ்தாப நபர்கள் இருவரது சடலங்களும் காணப்பட்டன. அத்துடன், கோழிப்பண்ணைக்கு வெளிச்சத்துக்காகப் பொருத்தப்பட்டிருந்த மின்குமிழ் உடைந்தும் காணப்டுகின்றது. உயிரிழந்தவரில் ஒருவரின் (14 ஆம் பக்கம் பார்க்க)

## முத்தையா முரளிதரன் யாழ்ப்பாணம் வந்தார்



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு அபிவிருத்தித் திட்டத்தின் இணைப்பாளராக அண்மையில் நியமிக்கப்பட்ட சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் யாழ்ப்பாணத்திற்கான விஜயம் ஒன்றை நேற்று மேற்கொண்டார். நேற்றுமாலை நல்லூரிலுள்ள ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தில் ஊடகவிய

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கம் முஸ்லிம் மக்கள் ஆதரவை நிச்சயம் இழக்கும்!

### ஹக்கீம் ஜனாதிபதிக்கு சவால்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நேற்றுக் கூட்டப்பட்ட தேசிய சமாதான நல்லிணக்க சபைக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இறுதி நேரத்தில் கலந்துகொள்ளவில்லை.

தமது கட்சியைச் சேர்ந்த 3 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்கி ஜனாதிபதி ஆளும் கட்சிப் பக்கம் அவர்களை இழுத்தெடுத்தமைக்கு தமது எதிர்ப்பையும், கண்டனத்தையும் வெளிப்படுத்தும் வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த முடிவை எடுத்துள்ளது என ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதுதொடர்பாகக் கருத்துவெளியிட்ட ஹக்கீம், குறிப்பிட்ட 3 பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதும், ஜனாதிபதி மீதும் வன்மையான முறையில் கண்டனங்களை வெளியிட்டார்.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையானது முஸ்லிம்களை தேசிய அரசியலில் பலவீனப்படுத்தும் முயற்சி என்று குற்றம் சுமத்தினார்.

இந்த விடயத்தில் எத்தகைய சவால்களையும் முறியடிப்பதற்கு

(14 ஆம் பக்கம் பார்க்க)

# “ஒஸ்லோ பிரகடனம்” ஒரு அறிக்கையே!

# இடைக்கால நிர்வாகத்தை அது கட்டுப்படுத்தாது

## நோர்வேத் தூதரக இரண்டாவது செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது பல்வேறு கருத்து முரண்பாடுகளுக்கு உள்ளாகியிருக்கும் “ஒஸ்லோப் பிரகடனம்” என்பது, ஒரு வெறும் அறிக்கையாகும் என நோர்வேத் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் ரொம் நம்ஸ்கொக் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இதுபற்றிக் கருத்து வெளியிடுகையில்,

ஒஸ்லோ பிரகடனம், எவ்விதத்திலும் விடுதலைப்புலிகளால் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை வரைபை கட்டுப்படுத்தப்படமாட்டாது.

ஒஸ்லோப் பிரகடனத்தின அடிப்படையில் இலங்கையில் இருதசாப்த காலமாக நிலவிவரும் இனப்பிரச்சின்னய தீர்வுக்குக் கொண்டு வருவதற்கு விடுதலைப்புலிகள் எப்போதும் தயாராக இருப்பதாகவும், அதற்கு முன்வருவதாகவும் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உறுதியளித்தால் விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக வரைபின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அரசு தயாராகவிருப்பதாக ஜனாதிபதி தெரிவிபபதாக அரசு தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் ஒஸ்லோ பிரகடனம் என்ற பெயரில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கும், இறுதித்தீர்வுக்கும் அரசாங்கம் நிபந்தனை விதிப்பதை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லையென விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே ஒஸ்லோ பிரகடனம் என்பது இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்களில் அனுசரணையாளர் என்ற வகையில் இலங்கை அரசுடனும், விடுதலைப்புலிகளுடனும் நடாத்திய ஆலோசனைகளின பின்னர் நோர்வேயினால் விடுக்கப்பட்ட ஒரு அறிக்கையாகும்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மூன்று சமாதானப் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்த பின்னர், நோாவே அரசினால் விடுக்கப்பட்ட ஊடக அறிக்கையே இதுவாகும். எனினும், விடுதலைப்புலிகள் தாங்கள் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட வேண்டுமென இப் பிரகடனம் எவ்வகையிலும் கட்டுப்படுத்த மாட்டாது.

ஐக்கிய இலங்கைக்குள் சுயாட்சி மூலம் நிரந்தர தீர்வொன்றைக் காண்பதற்கான வழிவகையாக மட்டுமே இப்பிரகடனம் உள்ளது.

இதேவேளை, ஒஸ்லோ பிரகடனம் அல்லது ஒஸ்லோ உடன்பாடு அல்லது ஒஸ்லோ இணக்கப்பாடு என்றெல்லாம் அரசு தரப்பால பிரசாரம் செய்யப்பட்டுவரும் ஒரு விவகாரம் ஒரு பிரகடனமோ அல்லது உடன்பாடோ அல்ல. அது மூன்றாவது சுற்றுப பேச்சின் பின்னர் நோர்வே அனுசரணையாளர்களால் விடுக்கப்பட்ட ஒரு அறிக்கையே இதுவாகும் எனவும விடுதலைப்புலிகள் தரப்பிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (ற-121)

# இலங்கையில் வர்த்தகத் தொழில்துறையை முன்னெடுக்க நோர்வே அரசு விருப்பம்

(கொழும்பு)

நோர்வே அரசாங்கம் இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வாத்தகத் துறைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு விருப்பம் வெளியிட்டுள்ளது என நோர்வேத் தூதரகத்தின் தலைமைச் செயலாளர் கிறிஸ்ரியன் வோம்க தெரிவித்துள்ளார்.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வாத்தகத் துறைகளுக்கான தொடர் பயிற்சி நெறிகளை நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய வர்த்தக சம்மேளனம், நோர்வே வாத்தகக் கைத்தொழில் சம்மேளனம், வேலைகொள்வோர் சம்மேளனம் ஆகியன இப்பயிற்சி நெறிகளை வழங்குகின்றன.

இலஙகைக்கான நோர்வே அபிவிருத்தி ஒத்துழைப்புத் திட்டத்தின் ஓர் அமசமாக இப்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

நோர்வே அரசாங்கம் கடந்த 10 ஆண்டுகளாக இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குக் குறிபபிடத்தக்க உதவிகளை வழங்கி வருகின்றது.

இவ்வுதவிகள் தொடாந்தும் வழங்கப்படும் என்றும் கிறிஸ்ரியன் வோம்க மேலும் தெரிவித்தார். (ற-121)

# அராலி நொச்சியம்பதி வீதி சேதமடைந்த நிலையில் உள்ளது

(பொன்னாலை)

அராலி மேற்கு-நொச்சியம்பதி வீதி கடந்த 35வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாமல் பாரிய குன்றும் குழியுமாக இருந்து வருகின்றது.

இதனால் மழைக்காலங்களில் மக்கள் போக்குவரத்துச் செய்யும் வேளைகளில் அருகால் செல்லும் வாகனங்களால் வெள்ளம் தெளிக்கப்படும் நிலை காணப்படுகின்றது.

வலி-மேற்குப் பிரதேச சபைககுச் சொந்தமான இவ் வீதியானது அராலி மேற்கு ஜே/160 கிராம சேவையாளர் பிரிவு கிராமத்தின் பிரதான நுழைவு வீதியாகக் காணப்படுகின்றது. இவ்வீதியில் வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியா சாலை, தென்னிலங்கைத் திருச்சபை ஆலயத்துடன் கூடிய சிறுவர் விடுதி மற்றும் கணனி நூலகப் பிரிவுகளைக் கொண்டமைந்த நிலையம், நொச்சியம்பதி விநாயகர் ஆலயம், அராலி அரசினர் கிராமிய வைத்தியசாலை ஆகியவற்றுக்குச் செல்லும் வீதியாகவும் காணப்படுகின்றது.

அப்பகுதி மக்களின் பாவனைக்கு அவசியமான இவ் வீதி இன்னமும் திருத்தப்படாமை குறித்து இப்பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர். (ப-49)

## மட்டு.சித்தாண்டியில்

# புலிகளின் அலுவலகம் மீது கைக்குண்டுத்தாக்குதல்

(கொழும்பு)

மட்டக்களப்பு சிததாண்டிப் பகுதியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அலுவலகம்மீது நேற்று முன்தினம் அதிகாலை கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப் பட்டுள்ளது.

இச் சம்பவத்தினால் எந்தவித மான சேதங்களும் ஏற்படவில்லை என மடடக்களப்பு அரசியல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதல் தொடாபாக மட்டககளப்பு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. (ற-8)

# ச. கல்விக்குப் பதிலாக வேறு 3 பாடங்கள்

(கொழும்பு)

பாடசாலைகளின் பாடவிதானத்தில் சமூகக் கல்விக்குப் பதிலாக 3 தனித்தனியான பாடங்கள் அறிமுகப்படுததப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவுத்துள்ளது.

பூமி சாஸ்திரம், வரலாறு, புவியியல ஆகிய பாடங்கள் இதற்குப் பதிலாக கொண்டுவரப்படவுள்ளன.

இப் பாடங்களின் போதனை அடுத்த ஆண்டுமுதல் பாடசாலைகளில் தரம் 7இல் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது. (ற-121)

# இராஜ கோபுரம்

(பொன்னாலை)

சங்கரத்தை பிட்டியம்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் புதிதாக இராஜ கோபுரம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

ஐந்து தளங்களைக் கொண்டதாக அமையவிருக்கும் இவ் இராஜ கோபுர வேலைகள் அடுததவருட முற்பகுதியில் நிறைவடையும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-49)

# மணிக் கோபுரம்

(பொன்னாலை)

அராலி-ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு புதிதாக மணிக் கோபுரம் ஒன்று நிர்மாண்க்கப்பட்டு வருகின்றது.

இவ்வாலயத்தில் புனருத்தாரண வேலைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வசந்த மண்டபத்திற்கான கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்று முடிந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ப-49)

# கணனி மையம்

(பொன்னாலை)

சித்தன்கேணி-ஸ்ரீகணேசா வித்தியாலயத்தில் கணனிக் கற்றை நெறி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான கணனிச் செயற்பாட்டு அறை ஒன்று தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இவ் வித்தியாலயத்தில் கணனி கற்கை நெறியை ஆரம்பித்தல் பொருட்டு, வித்தியாலயத்தின் பழைய மாணவரும் லண்டனில் வசித்து வருபவருமான கலாநிதி ஆர்.நித்தியானந்தன் கணனிக் கொள்வனவிறகெனவும் செயற்பாட்டு அறை நிறுவுவதற்கெனவும் இரண்டு லட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கி இருக்கின்றார். (ப-49)

## யாழ்.மாவட்ட பாடசாலைகளிலிருந்து

# இடைவிலகிய மாணவர்களை மீள இணைப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணையச் செயவதற்கான முயற்சிகளை யுனிசெவ் நிறுவனம் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றது.

இதன் முதல் கட்டமாக பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவர்கள் பற்றியும், அவர்களது இடைவிலகல்களுக்கான அடிப்படைக் காரணங்கள குறித்தும் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இவ்வாறான மாணவர்களின் குடும்பங்களில் நிலவும் வருமானமின்மையும், பொருளாதாரப் பின்னடைவும், உரிய வழிகாட்டல்கள் இல்லாமையுமே மாணவர்களின் இடைவிலகல் நிலைக்கு அடிப்படைக் காரணம் எனவும் அறியப் பட்டுள்ளது. (ப-16)

# பட்டதாரிகள் ஏமாற்றம்

(கோண்டாவில்)

நாடளாவிய ரீதியில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் இரண்டாம் தொகுதிப் பட்டதாரிகளுக்கான பயிற்சி நெறிக்காக தெரிவு செய்யப்பட்டவர்களில் கோப்பாய், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு எவ்வித பயிற்சிகளும் வழங்கப்படுவதில்லையென அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவர்களுக்கு குறித்த இடங்களுக்கு பயிற்சி நெறிக்கு வருமாறு கடிதம் அனுப்பப்பட்டபோதும் பயிற்சிக்கான எந்த ஒழுங்கும் செய்து கொடுக்கப்படவில்லை.

இது சம்பந்தமான அமைச்சோ, திணைக்களமோ, அரச அதிபர், பிரதேச செயலர் போன்ற உயர் அதிகாரிகளோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் பயிற்சி நெறிக்கு தெரிவானவர்கள் வீதியிலும் மர நிழலிலும் நேரத்தைக் கழித்துவிட்டு ஏமாற்றததுடன் வீடு திரும்புவதாகவும் தெரியவருகிறது. (ப-130)

# தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச உடுவே தம்மாலோக தேரர் விருப்பம்

ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான உடுவே தம்மாலோக தேரர், விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேச விருப்பம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜாதிக ஹெல உறுமயவுடன் கருத்து முரண்பட்டுள்ள உடுவே தம்மாலோக தேரர் தற்போது ஏனைய கட்சிகளின் தலைவர்களை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றார்.

எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை இவர் இரு தடவைகள் சந்தித்துப் பேசியுள்ளார். கடந்த சனிக்கிழமை மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பி.யுமான மனோகணேசனையும் தம்மாலோக தேரர் சந்தித்துப் பேசியுள்ளார்.

இச் சந்திப்பின் போதே தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேசுவதற்கான தனது விருப்பத்தினை தேரர் தெரிவித்துள்ளார். இது குறித்து விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடி தமிழ்ச்செல்வனை சந்திக்க வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் உடுவே தம்மாலோக தேரர் திட்டமிட்டுள்ளார்.

எதிர்வரும் 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தி வருகின்றது. இந் நிலையில் 2006ஆம் ஆண்டு நவம்பரில் தேர்தல் நடைபெறும் என்று அரசாங்கம் கூறுகின்றது. இவ்விடயம் தொடர்பில், ஜனாதிபதியுடனும், எதிர்க் கட்சியின்ருடனும் பேசி ஒரு இணக்கப்பாட்டினை ஏற்படுத்த தம்மாலோக தேரர் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ற)

# 11 ஈழ அகதிகள் தாயகம் திரும்பினர்

தமிழ்நாட்டிலிருந்து கடந்த சனிக்கிழமை இரவு மேலும் 11 ஈழத் தமிழ் அகதிகள் கடல் வழியாகத் தாயகம் திரும்பியுள்ளார்கள். மீன்பிடிப் படகொன்றில் தலைமன்னார் நோக்கி அழைத்து வரப்பட்ட இவர்கள் உறுமலை எனுமிடத்தில் இறக்கி விடப்பட்டுள்ளனர்.

பின்னர் ஸ்ரீலங்கா கடற்படையினரால் இவர்கள் மீட்கப்பட்டு தலைமன்னார் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர். நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட நீதிபதி முன்பாக இவர்கள் ஆஜர்படுத்தப்பட்டு அவரது உத்தரவின் பேரில் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (ற)

# மின்பாவனையாளர்களுக்கான மின்சார சபையின் அறிவித்தல்!

(பொன்னாலை)

பராமரிப்பு வேலைகளை மேற்கொள்வதற்கென யாழ்.குடாநாட்டின் சில பகுதிகளில் எதிர்வரும் தினங்களில் காலை 9.00மணி முதல் மாலை 5.00மணி வரை மின்சார விநியோகங்கள் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

அந்த வகையில், எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை-இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, யாழ்நகர்ப்பகுதி, ஆணைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கந்தரோடை, மாசியப்பிட்டி, பண்டத்தரிப்பு இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம்; மூளாய், காரைநகர் ஆகிய இடங்களிலும்,

13ஆம் திகதி சனிக்கிழமை பட்டணப் பகுதி நீங்கிய யா மாநகரசபைப் பகுதி, மருத்துவ பீடப் பிரதேசம், பொற்பதி வீதி, கோண்டவில், உரும்பிராய் ஆகிய பகுதிகளிலும்,

20ஆம் திகதி சனிக்கிழமை புன்னாலைக்கட்டுவன், புத்தூர், அச்செழு, அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராடசிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

27ஆம் திகதி சனிக்கிழமை அளவெட்டி, பன்னாலை, சுன்னாகம், மல்லாகம், ஏழலை, தெல்லிப்பழை ஆகிய இடங்களிலும்,

டிசம்பர் மாதம் 4ஆம் திகதி குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ப-49)

# பந்து அரசிடம்; அடுத்தது என்ன?



இலங்கை அரசியல் நிகழ்வுகளை உற்று நோக்குபவர்களுக்கு அண்மையில் அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் செய்து வரும் காரியங்கள் வியப்பைத் தரலாம்.

வெளிநாட்டிலிருந்து வரும் தூதுவர்களுடன் சந்திப்பு, வெளிநாட்டுக்குத் தங்கள் தூதுவரை அனுப்பி அங்குள்ள பெருந்தலைகளுடன் சந்திப்பு என்று பெரும் நாடுகளின் இராஜதந்திர நடவடிக்கைகளில் இரு பகுதியும் ஈடுபட்டிருந்தன.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான இரு பகுதியினரதும் முன்னெடுப்புகள்தான் கூர்ந்து நோக்கப்படவேண்டியவையாகின்றன.

ஒருபுறத்தில் அரசானது தந்திரோபாயக் காய்நகர்த்தல்களில் ஒருபடியாக ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இலங்கைத தொழிலாளர் காங்கிரஸை வளைத்துப் போட்டது.

வெளியிலிருந்து ஆதரவு, உள்ளிருந்து ஆதரவு என்று பலவிதமாகவும் பேசிக்கொண்டிருந்த ஆறுமுகம் தொண்டமான் இப்போது அமைச்சர் பதவியையும் ஏற்றுக்கொண்டு விட்டார். இந்நிகழ்வுடன் தொங்குபறியில் ஊசலாடிக்கொண்டிருந்த அரசாங்கம் பெரும பான்மை பலத்தைப் பெறாவிட்டாலும் ஓரளவுக்கு ஊசலாட்டத்தைக் குறைத்துக் கொண்டது.

அத்தோடு தொங்குபறியில் அரசாங்கம் நிற்பதால் பேச்சுவார்த்தையை மேற்கொண்டு தொடரமுடியவில்லை என்ற அரசின் பிரசாரமும் அடியுண்டு போயிற்று.

எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியோ அரசாங்கத்தை குறைசொல்வதோடு மாத்திரம் நின்றுவிடாமல் இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையில்-நியாயமான தீர்வுயோசனையின் அடிப்படையில் இடம்பெறும் எவ்விதமான சமாதான முன்னெடுப்புக்கும் தாங்கள் சம்மதம் என்று வெளியிட்ட அறிக்கையுடன் பந்தை சந்திரிகாவின் பக்கம் தூக்கிப் போட்டுவிட்டு பந்து எப்போதோ வந்துவிட்டது இன்னும் நீங்கள்தான் உதைக்க ஆரம்பிக்கவில்லை என குற்றஞ்சாட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆளும் கட்சியும் தன் பங்குக்கு தீர்வுப் பொதி, தீர்வுத்திட்டம் அது இது என்று பூசி மெழுகி இப்போது புதிதாக தேசிய ஆலோசனைச் சபை என்பதில் வந்து நிற்கிறது. இதுவரை பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காகிய அனுபவத்தில் குரங்கென்று நினைத்தே பிடிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்



இதே காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் சமாதானத்துக்கான தங்களின் விருப்பை பல்வேறு வழிகளிலும் வெளியிட்டதோடு சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு தாங்கள் எப்பவோ தயார். அரசாங்கம்தான் பின்னடிக்கிறது என்று வெளியுலகிற்கு நிரூபிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அதன் ஒரு வெளிப்பாடுதான் அண்மையில் புலிகளின் அதிஉயர் அரசியல் ஆலோசனைக் குழுவின் ஐரோப்பியச் சுற்றுப்பயணம்.

விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களுடன் வள ஆலோசகர்களாக பல்வேறு நாடுகளிலிருந்தும் வந்த சட்ட வல்லுநர்கள் அடங்கிய குழு பாலசிங்கம் அவர்களையும் இணைத்துக்கொண்டு உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலான இடைக்கால நிர்வாக சபை என்ற தமது திட்டத்தைச் சீர்செய்வதில் முனைந்தார்கள்.

வழமைபோலவே சட்டவல்லுநர்களையும், பாலசிங்கத்தையும் வன்னிக்கு அழைத்துத் தீர்வுத்திட்டம் தயாரித்து பின்னர் செய்தியாளர் மாநாட்டில் அதனை வெளிப்படுத்தியுமிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யாமல் உலகறிய பல்வேறு முக்கியமான நாடுகளிலும் வதியும் தமது சட்டவல்லுநர்களை அழைத்து தீர்வுத்திட்டம் ஒன்றை தயாரித்ததன்மூலம் இது ஒன்றும் மேம்போக்கான திட்டம் அல்ல. இலங்கையின் அரசியலமைப்பு, இறையாண்மை இனங்களுக்கிடையிலான வேற்றுமை ஒற்றுமைகளை கருத்தில்கொண்டு உலக வழக்கிலுள்ள அரசியல் அமைப்புகளுக்கு இணையாகத் தயாரிக்கப்பட்ட திட்டவரைபு என்பதை உலகறியச் செய்வதே இந்த ஐரோப்பியச்



விஜயத்தின் முக்கிய நோக்கம்.

தொடர்ந்தும் அவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு மேற்கொண்ட சுற்றுப்பயணத்தில் பல்வேறு தலைவர்களையும் சந்தித்து உரையாடி சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தாங்கள் அறிக்கையளவில் மட்டுமன்றி செயலளவிலும் தயார் என்பதை விளக்கியிருக்கிறார்கள்.

இப்போது புலிகள் வசம் எழுந்தமானமாக இன்றி சட்ட வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்டம்.

'அரசாங்கத்தின் வசம் ஆக்கபூர்வமான திட்டம் எதுவுமில்லை. ஆனால் தம்மிடம் இனப்பிரச்சினைக்கு சரியான தீர்வு உண்டு என இருபெரும் தேசியக் கட்சிகளும் அறிக்கைகளை வெளியிட்டுக்கொண்டிருக்கின்றன. புலிகள் செய்ததுபோல் சரியானதொரு தீர்வுத்திட்டத்தை தயாரித்து அதனை உலகறியச் செய்வதே முறை.

பந்து இப்போது அரசாங்கத்தின் பக்கம் அடுத்தது என்ன?

**நன்றி இணையத்தளம்**

# அரசியல் ஆலோசனை சபை தமிழ்மக்களுக்குத் தேவையற்றது

## ஜெயா எம்.பி. சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பேச்சுவார்த்தையை இழுத்தடிக்கும் வகையில் அரசியல் ஆலோசனை சபையை நிறுவியுள்ளார். இது தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தேவையற்ற விடயமாகும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி குறிப்பிட்டார்.

தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் ஒரு இலட்சம் ரூபா செலவில் சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலயத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வித்தியாலய அதிபர் ம.சிவசுந்தரம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஜெயானந்தமூர்த்தி எம்.பி. மேலும் பேசுகையில்,

தமிழ்மக்கள் தமது உரிமையை வென்றெடுக்க இதுவரை காலமும் ஆயுதப் போராட்டம் நடத்திவந்தனர். ஆனால் தற்போது சமாதானப் பேச்சுக்கள் மூலம் உரிமைகளை வென்றெடுக்க தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதான வழிக்குத் திரும்பியுள்ளனர். ஆனால் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் இதை மழுங்கடிக்கும் வகையில் தொழிற்பட்டு வருகின்றது.

இந்நிலைமை நீடிக்குமானால் எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகள் ஏற்படுவதை எவராலும் தடுக்கமுடியாது. என்னைப் பொறுத்தமட்டில், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருக்கும்வரை தமிழ் மக்களின் விடிவுக்காகவும், எமது மக்களின் எதிர்கால சுபீட்சத்திற்காகவும் உழைப்பதுடன், எமது தமிழ்த்தேசியத்தை வலுப்படுத்தவும் உறுதுணையாகவும் நிற்பேன்.

இன்றைய நிலையில், கல்வி ஒன்றுதான் அழியாத சொத்து. கடந்த காலங்களில் போர் நடைபெற்ற வேளைகளில் படையினரால் எமது சொத்துக்கள், வீடு வாசல்கள், பாடசாலைகள், ஆலயங்கள் என்பன குண்டுவீசி அழிக்கப்பட்டன. மொத்தத்தில் தமிழ் மக்களின் முதுகெலும்பு முறிக்கப்பட்டது என்றார். இந்நிகழ்வில் கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர், யூ.எல்.எம். ஜெயினுடீன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் இ.வேலுப்பிள்ளை, வித்தியாலய அதிபர் ம.சிவசுந்தரம், உப அதிபர் க.மகேசன் உட்படப் பலர் உரையாற்றினர். (ற)

# "மத்தியின் சொற்போர்களம்" யாழ். மத்திய கல்லூரி முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தவேளை, கடந்த 1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்.கோட்டை இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான பொன்.விபுலாநந்தன் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட 'மத்தியின் சொற்போர்களம்' விவாதச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் இடம பெற்றது.

இப்போட்டிகளுக்கு நடுவராகவும், பிரதம விருந்தினராகவும் உயர் கல்வி அமைச்சின் முன்னாள் தமிழ்த்துறைக் கல்விப் பணிப்பாளர் ஜி.பி.அல்பிரட் கலந்து சிறப்பித்தார்.

இறுதிப் போட்டியில் முதலாம் இடத்தை யாழ். மத்திய கல்லூரியும், இரண்டாம் இடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையும், மூன்றாம் இடத்தை யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையும் பெற்றன.

இப்போட்டியில் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த சுமார் 20 பாடசாலைகள் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ந-5)



நேற்று யாழ்ப்பாணத்திற்கு வந்த உலக உணவுத் திட்ட அமைப்பின் உயரதிகாரிகள் அடங்கிய குழுவினர் யாழ்.மாவட்ட செயலகத்தில் அரச அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

படங்கள்: ஐங்கரன்

# நீள் பார்வை

# ஈழத் தமிழர் இறைமை

அத்தியாயம்-2 தொடர்

மு. திருச்செல்வம்

அரசியலமைப்பு மாற்றத்தை மட்டும் கொள்கையாக முன் வைத்த பொது வாக்குக் கணிப்பாகப் பொதுத் தேர்தலைக் கருதமுடியாது எனவும் கூறினார்.

1970 ஜுலை 19 ஆம் நாள் சிங்கள மக்களின் வரலாற்றில் முக்கிய அரசியல் எழுச்சிக்குக் கால்கோள் அமைக்கப்பட்ட நாள்; சிங்கள மக்கள் தங்கள் அடிமைத் தளைகளை அறுத்தெறியக் கால்கோள் அமைத்த நாள்.

சம்பிரதாய பூர்வமான நிகழ்ச்சிக்காக, அன்று நவரங்கலா கோலாகலமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. நாட்டின் நாலா பக்கங்களிலும் இருந்து 1,700 பேர் அழைக்கப்பட்டு கூடியிருந்தனர். உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர். வேளாண்மை செய்வோர், சிறு கைத்தொழில் செய்வோர், கடற்றொழில் செய்வோர் என நாட்டின் பல்வேறு நிலையில் உள்ள சிங்கள மக்களின் சார்பிலும் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

157 சனப்பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களும் வந்திருந்தனர். மூதறிஞர் செல்வ நாயகத்தின் தலைமையில் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் வந்திருந்தனர். அரசியலமைப்பு யாக்க அவையைப் புறக்கணிப்பது பகிஷ்கரிப்பது என்று தான் தழிழரசுக் கட்சியினர் எண்ணியிருந்தனர். கூட்டத்தில் கலந்து கொள்வது எனப் பின்னர் தீர்மானித்துச் சென்றிருந்தனர்.

பிரிட்டிஷார் வழங்கிய அரசியலமைப்பின் விதிகளைப் பொருட்படுத்தாமல், சட்டத்துக்கு முரண்பட்ட முறையில், ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்பு யாக்க அவையிலும், தமிழ் மக்களினால் மீட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்ட, கூட்டாட்சி அரசுக்கு கொள்கையை முன்வைக்க வாய்ப்பாகக் கருதியே மூதறிஞர் செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக் கட்சியினர் கலந்து கொண்டனர்.

1949 டிசம்பர் 18 ஆம் நாள், மூதறிஞர் செல்வநாயகம் தமிழரசுக் கட்சியின் முதல் மாநாட்டின் தலைமையுரையில் மொழி இனங்களுக்கிடையேயுள்ள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்குரிய இரண்டு வழிகளைக் கூறியிருந்தார். முதல் வழி நாட்டைத் துண்டாடுதல்; இரண்டாவது வழி கூட்டாட்சி அரசை அமைத்தல்.

இரண்டாவது வழியில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இணைந்து வாழ்வதற்குரிய ஆகக் குறைந்த ஏற்பாட்டுக்கு முயற்சி செய்யும் முகமாகத் தனது கடைசி முயற்சியாக அரசியலமைப்பு யாக்க அவைக்குச் சென்றார்.

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா முதலில் பேசினார். தீர்மானமொன்றை முன் மொழிந்து பேசினார். சனப்பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களாகிய தாங்கள் அனைவரும் இலங்கை மக்களின் அரசியலமைப்பு யாக்க அவையாக இணைந்து செயற்படப் போவதான தீர்மானத்தை முன்மொழிந்தார். இலங்கை மக்களின் பேரால் கூட்டத்தைக் கூட்டியிருப்பதாகப் பிரதமர் கூறினார்.

இக்கூட்டம் நவரங்கலாவில் கூட்டப்பட்டதன் காரணத்தை விளக்கி னார். "இது சனப்பிரதிநிதிகள் சபைக் கூட்டமல்ல; சனப்பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் கூடும் கூட்டம் என்றார். புதிதாக யாக்கப்பட இருக்கும் அரசியலமைப்புக்குரிய உரிமையும், வலிமையும் மக்களால் வழங்கப்பட்டுள்ளது. 1948 அரசியலமைப்பிலிருந்தோ, அல்லது பிரிட்டிஷ் அரசிடமிருந்தோ புதிய அரசியலமைப்பை யாக்கும் வலிமையும் உரிமையும் பெறப்படவில்லை என் பதை வலியுறுத்தினார்.

## இலங்கை மக்கள்

இலங்கை மக்களின் அரசியலமைப்பு யாக்க அவை;
இலங்கை மக்களின் வலிமையிலும் உரிமையிலும் யாக்கப்படவுள்ள அரசியலமைப்பு;
இலங்கை மக்களுக்காக யாக்கப்படும் அரசியலமைப்பு;
இலங்கை மக்களின் அடிப்படைச் சட்டமாக விளங்கப் போகின்ற அரசியலமைப்பு;
இலங்கை மக்களின் நோக்கங்களை நிறைவு செய்ய வழி வகுக்கக் கூடிய அரசியலமைப்பு;

இலங்கை மக்கள் என்ற சொற்றொடர் மலிந்து காணப்பட்டது. வலிந்து பயன்படுத்தப்பட்டிருந்தது. அரசியல் எழுச்சியால் தோற்றுவிக்கப்பட்ட அரசியலமைப்பு யாக்க அவை இவ்வாறு தானே எழுத வேண்டும். சட்டத் தொடர்ச்சியற்ற அரசியலமைப்புக்கு வலிமை கொடுக்கும் தூண்களாக இலங்கை மக்கள் காட்டப்பட்டனர்.

இலங்கையில் இரு பெரும் மொழி வழி மக்கள் உளர்; தமிழ் மக்கள் உளர், சிங்கள மக்கள் உளர், மதவழி மக்களாகக் கிறிஸ்தவ மக்கள், இஸ்லாமிய மக்கள், இந்து மக்கள், பௌத்த மக்கள் உளர். இதனைப் பிரதமர் தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

"எம்மிடையே பல இனக் குழுக்கள் வாழ்கிறார்கள். சிங்களவர், தமிழர், பறங்கியர், மலாய்க்காரர் ஏனையோர் இவர்கள் எம்மிடையே பல மதக்குழுக்கள் வாழ்கிறார்கள். பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் ஆகியோர்கள் இவர்கள். நாங்கள் இலங்கை மக்கள்; நாங்கள் ஒன்றாகச் செயற்பட வேண்டும். ஒரு நாடாகச் செயற்பட வேண்டும்.'

பல்வேறு இன மத மக்களின் தலைவர்கள் அரசியலமைப்பு யாக்க அவையில் உறுப்புரிமை பெற்றிருந்தார்கள். தமிழர்களின் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவராக மூதறிஞர் செல்வநாயகம் அங்கிருந்தார். சிங்களவர்களின் ஒப்புயர்வற்ற தலைமையைத் தாங்கித் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அங்கிருந்தார். இலங்கையின் இரு பெரும் நாட்டினங்களும் அங்கு பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன.

இரு நாட்டினங்களும் கூட்டாகச் சேர்ந்து, இந் நாட்டின் அடிமைத் தளைகளின் கடைசிக் கட்டையும் அறுத்து எறிய இது நல்ல வாய்ப்பு. தமிழரும், சிங்களவரும் அளித்த ஆற்றலுரிமைக்கமைய, அவர்களின் தலைவர்கள் செயற்படவும், பேசித் தீர்க்கவும், சோல்பரி அரசியலமைப்பு ஆட்சியின் கீழ் ஏற்பட்ட நலிவுகளைப் போக்கவும் , நலவுரிமைகளைப் பேண்வும் நல்லதோர் வாய்ப்பு எல்லா இனங்களும் சேர்ந்து ஒரே நாடாகச் செயற்பட பிரதமர் அழைத்திருந்தார். பிரதமரின் அழைப்பை ஏற்பது இரு நாட்டினங்களும் ஒரே நாட்டில் இணைந்து வாழமுயற்சிப்பது, மனிதாபிமான முயற்சியே. இதனால் தான் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் அரசியலமைப்பு யாக்க அவைக் கூட்டத்தில் கலந்து கொண் டனர்.

அந்நியர் கைப்பற்றும் வரை அடிமைப்படுத்தும் வரை தமிழர்களும், சிங்களவர்களும் தனித்தனி நாடுகளாக இலங்கைத் தீவில் வாழ்ந்தனர். தமிழர் தம் உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் சிங்களவர் தம் உரிமைகளை விட்டுக் கொடுக்காமல், இணைப்பான ஆட்சியொன்றை அமைத்து இலங்கையை ஒரே நாடாகக் கொண்டால்? மூதறிஞர் செல்வநாயகத்தின் இந்தக் கடைசி முயற்சி மனித இனங்கள் இணைந்து வாழும் முயற்சிக்கு இலங்கையையே எடுத்துக் காட்டாக ஆக்கும் முயற்சியன்றோ!

(தொடரும்)

# செய்தித் துளிகள்

## புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்ப் வேலைத்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பங்களா வீதி, பெருங்குளம் வதி, சங்கத்தானை வீதி என்பன புனரமைக்கப்படவுள்ளது.

இவ் வேலைத்திட்டங்களிற்காக யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினால் 2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-47)

## 60,000 ற்கும் மேற்பட்டோர் வாக்காளர்களாகப் பதிவு

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியை உள்ளடக்கிய கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் இதுவரை 60ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் புதிதாக வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ளனர்.

கடந்த காலங்களில் இடம் பெற்ற புதிய வாக்காளர் பதிவுகளை விட இம்முறை அதிகளவானோர் புதிதாகப் பதிவுகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-43)

## நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

நீர்ப் வேலைத்திட்டத்தின் கீழ் சாவகச்சேரிப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீதிகள் மற்றும் பொது கட்டடங்கள் அமைக்கும் வேலைகளிற்காக யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதயினால் 4மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ப-47)

## சட்டவிரோத மின் பாவனை

(சில்லாலை)

வலிகாமம் மேற்கிலுள்ள பல்ல சுட்டி கிராமத்தில் சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பாவிப்பவர்கள் தொகை அதிகரித்துள்ளது.

இதனால் அனுமதி பெற்ற பாவனையாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.(ப-58)

## புனரமைக்கக் கோரிக்கை

(மருதங்கேணி)

புலோலி தெற்கிலுள்ள 3 விவசாயக் குளங்களை புனரமைத்துத் தரும்படி அப்பகுதி விவசாயிகள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

புலோலி தெற்கிலுள்ள முறாவிலகுளம், சிலிந்தில் குளம் மற்றும் கொட்டுக்கேணிக் குளம் ஆகிய குளங்களையே இவ்வாறு புனரமைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இவை கடந்த 15 வருடகாலத்திற்கு மேல் திருத்தப்படாமல் காணப்படுவதால் இப்பகுதி மக்களின் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-35)

## கலாசார மண்டபம் திறந்து வைக்கப்பட்டது

(கொற்றாவத்தை)

வடமராட்சி திக்கம் கலாசார மண்டபம் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமியால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

சுமார் ரூபா 40 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட இம் மண்டபத் திறப்பு விழாவில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், பி.சுரேஸ்பிறேமச்சந்திரன், செ.கஜேந்திரன், மாவை சேனாதிராஜா, க.ஈழவேந்தன், திருமதி பத்மினி சிதம்பரநாதன், கி.சிவநேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

(ப-114)

## வீடுகள் கையளிப்பு

(திருநெல்வேலி)

நிக்கொட்டின் நிதியுதவியுடன் குருநகர்ப் பகுதியில் புனரமைப்புச் செய்யப்பட்ட 120 வீடுகள் கடந்த வெள்ளிக்கிழமை உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.

யாழ்.மாவட்ட பதில் அரசாங்க அதிபர் இவ்வீடுகளை உரியவர்களடம் வைபவ ரீதியாகக் கையளித்தார். (ற-43)

## கூட்டம்

புன்னாலைக்கட்டுவன் தனியார் பஸ் சங்கத்தினருக்கான விசேட கூட்டம் ஒன்று கடந்த புதன்கிழமை மாலை கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீ செல்வத்தினால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் நடாத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் வீதி ஒழுங்குகளை எவ்வாறு பேணுதல், பயணிகளை ஏற்றி இறக்குவது போன்ற வடயங்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. (ப-74)

## குப்பை கொட்ட அனுமதி

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் நகரசபையால் சேகரிக்கப்படும் குப்பைகளை தனங்கிளப்புப் பகுதியில் கொட்டுவதற்கு படைத்தரப்பினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதுவரை காலமும் நகரசபையினரால் கொல்லங்கிராய்ப் பகுதிகளில் குப்பைகள் கொட்டப்பட்டு வந்ததற்கு பொதுமக்கள் தெரிவித்த எதிர்ப்பை அடுத்து குப்பைகள் அகற்றும் பணி இடைநிறுத்தும் அபாயம் இருந்தது.

இதனை சுட்டிக்காட்டி சாவகச்சேரி நகரசபை அபிவிருத்திக்குழுவும், தென்மராட்சி பிரதேச செயலாளரும் படையினருக்கு விடுத்த வேண்டுகோளையடுத்தே படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். (ப-127)

## விவாத அரங்கு - 6

விடயம்

மதமாற்றத் தடைச் சட்டம்
தேவையானதா?
தேவையற்றதா?

நடுவர் : விதுரன்

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

*அனுப்பவேண்டிய முகவரி*

வீவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# ஆஸியுடனான டெஸ்டில் இந்தியா தோல்வி இதற்குக் காரணம் இந்திய கிரிக்கெற் சபையே

## கடுமையாகச் சாடுகிறார் கவாஸ்கர்

மோசமான திட்டம் இடுதலால் இந்திய அணி நாக்பூர் தொடரில் தோல்வி அடைந்துள்ளதாக கிரிக்கெற் வாரியம் மீது இந்திய அணியின் முன்னாள் கப்ரின் கவாஸ்கர் பாய்ந்துள்ளார.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா 0:2 என்ற புள்ளிக் கணக்கில் கோட்டை விட்டது. கடந்த 1969ஆம் ஆண்டுககுப் பின்னா் முதல் முறையாக சொந்த மண்ணில் இந்திய அணி டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலியாவிடம் பறிகொடுத்துள்ளது. ஜீரணிக்க முடியாத இந்தத் தோல்விக்கு இந்திய கிரிக்கெற் வாரியம் தான முக்கிய காரணம் என்று முன்னாள் கப்ரின் கவாஸ்கா் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவா் கூறுகையில்,

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் மோதல்களை இந்திய கிரிக்கெற் வாரியம் சரியான முறைப்படி திட்டமிடவில்லை. பெங்களூர் ஆடுகளத்தில் அவுஸ்திரேலியா 3 முறை வெற்றிபெற்றுள்ளது. இது நன்றாக தெரிந்தும் அவுஸ்திரேலிய அணிக்கு நம்பிக்கை வரும் வகையில் பெங்களூரில் முதல் டெஸ்ட் போட்டி ஒதுக்கப்பட்டுளளது. இதற்குப் பதிலாக சென்னையில் முதல் டெஸ்ட் போட்டி நடத்தப்பட்டு இருக்க வேண்டும்.

அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் மற்றும் ஐரோப்பிய சுற்றுப்பயணம் உட்பட இந்த ஆண்டில் மட்டும் இந்தியா 28 ஒருநாள் போட்டிகளில மோதியுள்ளது. டெஸ்ட் போட்டியை கணக்கில் எடுத்துக்கொண்டால் இந்தியா 6 மோதல்களில் தான் ஆடியுள்ளது. இதுவும் இந்தியாவின் தோல்விக்கு ஒரு காரணம் என்று கவாஸ்கா் கூறியுள்ளார்.

மேலும் அவா் கூறும்போது அதிகமான ஒருநாள் போட்டிகளில் ஆடிய காரணத்தால் இந்திய வீரா்களின் மனதில் இன்னும் ஒருநாள் போட்டி பற்றிய எண்ணம் நீங்கவில்லை. மனநிலையை முதலில் மாற்றினால்தான் ஆசிய மோதலில் இந்திய அணியிடம் இருந்து சிறப்பான முடிவை எதிர்பார்க்க முடியும் என்றார்.

நாகபூர் ஆடுகளம் வேகப்பந்து வீச்சாளா்களுக்கு கைகொடுக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவில் இருப்பதைப் போன்ற ஆடுகளம் நாக்பூரில் ஏற்படுத்தப்பட்டது. இதுபோன்ற ஆடுகளங்களில் இந்திய வீரா்கள் எந்த அளவுக்கு சோதனையை எதிர்கொள்வார்கள் என்பது நன்றாகத் தெரிந்தும் கிரிக்கெற் வாரியம் எப்படி அனுமதி கொடுத்தது என்று தெரியவில்லை. முன்னாள் இந்திய வீரரான கீர்த்தி ஆசாத்தும இந்திய கிரிக்கெற் வாரியத்தை சாடியுள்ளார். மோசமாக ஆடுகிறார் என்று தெரிந்தும் விக்கெற் கப்பா் பார்த்திவ் பட்டேலை தொடர்ந்து அணியில் தேர்வு செய்தது மிகப் பெரியதவறு என்று அவா் கூறினார். (ப)

## உதைபந்தாட்ட லீக் பயிற்சி முகாம்

யாழ்.உதைபந்தாட்ட லீக் எதிர் வரும் 5,6,7ஆம் திகதிகளில் உதைபந்தாட்ட பயிற்சி முகாம் ஒன்றை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடாத்தவுள்ளது.

இப் பயிற்சி முகாமில் பாடசாலைகளின் பயிற்றுநா்களும், விளையாட்டுக் கழகங்களின் பயிற்றுநா்களும் கலந்துகொள்ளலாம்.

அதேவேளை, பாடசாலைக் கழகங்களில் இருந்து தலா ஒருவா் மாத்திரமே கலந்துகொள்ளலாமென யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் செயலாளா் எம்.பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

முதல் நாள் பயிற்சி முகாம் எதிாவரும் 5ஆம் திகதி பிப.3.00 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் அதனைத் தொடா்ந்து 6ஆம், 7ஆம் திகதிகளில் நடைபெறும் பயிற்சி முகாம் காலை 8மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எஸ்.கிளிபேட் அன்ரனிப்பிள்ளையின் நெறிப்படுத்தலில் நடைபெறவுள்ள இப் பயிற்சி முகாமில் சி.லைசன்ஸ் பெற்ற ஈ.ஆனல்ட், திருமாறன், விஜயகுமார் ஆகியோா விரிவுரைகளையும், செய்முறை பயற்சிகளையும் நடாத்தவுள்ளனா.

இறுதிநாள் அன்று நடைபெறவுள்ள பரீட்சையில் சித்தியடைவோருக்கு கொழும்பில் நடைபெறும் சி.லைசன்ஸ்க்கான பயிற்சி முகாமில் கலந்துகொள்ளும் வாய்புக்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (7,110)

# விளையாட்டு செய்திகள்

## மத்தியஸ்தர் பரீட்சை இம்முறையும் யாழில்

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் வருடா வருடம் நடாத்தப்படும் உதைபந்தாட்ட மத்தியஸ்தா்கள் பரீட்சையை இம்முறையும் யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளை யாழ். உதைபந்தாட்ட மததியஸ்தா் சங்கம் செய்துள்ளது.


டிசம்பா் மாதம் 19ஆம் திகதி ஆங்கிலத்திலும், தமிழிலும் நடைபெறவுள்ள இப் பரீட்சைக்கான விணணப்பங்களை உடனடியாக அனுப்பிவைக்கும்படி அகில இலங்கை உதை பந்தாட்ட மத்தியஸ்தா் சம்மேளனம் கோரியுள்ளது.

இப் பரீட்சைக்கு தயார் செய்யும் நோக்கில் எதிா்வரும் 13ஆம், 14ஆம் திகதி தொடக்கம் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் யாழ். உதைபநதாட்ட மத்தியஸ்தா் சங்கப் பணிமனையில் விரிவுரைகள் நடைபெறவுள்ளன.

இப பரீட்சை தொடா்பான மேலதிக விபரங்களைப்பெற விரும்புவோர் உதைபந்தாட்ட மத்தியஸ்தா் சங்கச் செயலாளா் ஈ.ஆனல்ட் உடனோ அல்லது சங்கத்தலைவா் கப்ரின் டி.ஏ.எம்.குணசிங்கத்துடனோ தொடா்பு கொள்ளலாம். (7-110)



இந்திய தடகள வீராங்கனை அஞ்சு ஜார்ஜ், அவரது கணவரும் பயிற்சியாளருமான பாப ஜார்ஜ் இருவருக்கும் கொச்சியில் நேற்று நடந்த விழாஒன்றில் அமர்க்களமான வரவேற்பு அளிக்கப் பட்டது.



ஆஸ்திரியாவின் லின்ஸ் நகரில் நடந்த டபள்யூ.டி.ஏ., டென்னிஸ் இறுதிப்போட்டி நேற்று நடந்தது. இதில் பரான்சின் அமெலி மவுரீஸ்மோ 6-2, 6-0 என்ற நேர் செட்களில் ரஷ்யாவின்எலினா போவினாவை வீழ்த்தி சாம்பியன் பட்டம்வென்றார். கோப்பையுடன் மவுரீஸ்மோ.

### தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில்

## மாவீரர் தினத்தை முன்னிட்டு உதைபந்தாட்டப் போட்டி

(பொன்னாலை)

தமிழீழ மாவீரா் நாளை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்டப் பிரிவு நடாததும் 11பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டி எதிா்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஆகிவற்றில் தெரிவுசெய்யப்பட்ட மிகச் சிறந்த அணிகள் மோதவிருக்கின்றன.

வெற்றிபெறும் அணிகளுக்கு பெறுமதிமிக்க பணப் பரிசில்களும கேடயங்களும் வழங்கப்படவிருக்கின்றன என தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பிரிவு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-49)

## மும்பை டெஸ்டில் பங்கேற்கார் கங்குலி

மும்பை டெஸ்டில் சௌரவ் கங்குலி பங்கேற்கும் வாய்ப்புக்கள் இல்லையென தெரியவருகின்றது.

இந்தியக் கிரிக்கெற் கப்ரின் சௌரவ் கங்குலி தசைப்பிடிப்புக் காரணமாக நாக்பூர் டெஸ்டில் பங்கேறகவில்லை. அவா் தற்போது சிகிச்சை பெற்றுவருகிறார். இன்னும் முழுமையாகக் குணமடையவில்லை.

இந்நிலையில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டி மும்பை வான் கடே மைதானத்தில் நாளை தொடங்குகிறது. இந்தப் போட்டிக்காக இரு அணி வரா்களும் நேற்றுப் பயிற்சி தொடங்கினா். சௌரவ் பேட்டிங் பயிற்சி செய்தார்.

ஆனாலும் வலி அதிகமாகவே பயிற்சியை பாதியிலேயே முடித்துக்கொணடு கிளம்பிவிட்டார். மும்பைப் போட்டியில் பங்கேற்பீா்களா? என்று நிருபா்கள் அவரிடம் கேட்ட போது, பயிற்சியாளா் ஜோன் ரைட்டைக் கேளுங்கள் என்று பதிலளித்தார். ஜோன் ரைட்டைக் கேட்ட போது அவரது காயம் இன்னும் முழுமையாகக் குணமாகவில்லை. இதனால கங்குலி நாளைய போட்டியில் விளையாட மாட்டார் என்றார். (ப)

## மும்பையில் நடைபெறவுள்ள டெஸ்டையும் கைப்பற்றுவதற்கு அவுஸ்திரேலியா திட்டம்

மும்பையில் நடக்கவிருக்கும் கடைசி டெஸ்ட் போட்டியிலும் வெற்றி பெற அவுஸ்திரேலியா திட்டமிட்டுள்ளது.

கில்கிறிஸ்ட் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி 35ஆண்டு இடைவெளிக்குப் பினனா் இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரை கைப்பற்றி சாதனை படைத்துள்ளது.

நாக்பூர் டெஸ்ட் போட்டியில் இந்தியா 342 ஓட்ட வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவிடம் தோல்வி கண்டது. நம்பிக்கை நட்சத்திரங்களான டெண்டுல்கா், டிராவிட் மற்றும் லக்ஷ்மன் ஆகியோா் சொதப்பினா். காயம் காரணமாக கப்ரின் கங்குலி களமிறங்கவில்லை. இந்த நிலையில் இரு அணிகளும் மோதும கடைசி டெஸ்ட் பந்தயம மும்பையில் வருகிற 3 ஆம் திகதி நடக்கவுள்ளது. இந்தப் போட்டியிலும் வெற்றிபெற வேண்டும் எனற துடிப்பில் அவுஸ்திரேலியா காத்திருக்கின்றது.

நாக்பூர் தொடரை கோட்டை விட்ட சோகத்தில் இந்திய வீரா்கள் அனைவரும் பதட்டம் அடைந்துள்ளனா். ஆறுதல் தேடும் முயற்சியில் காத்திருக்கும் இந்திய வீரா்களை, இந்தப் போட்டியிலும தவிக்க விடவேண்டும் என்ற கணிப்பில் அவுஸ்திரேலிய் பந்து வீச்சாளா்கள் உள்ளனா்.

கேம்பீா், தினேஸ் கார்த்திக் ஆகிய புதிய ஆட்டக்காரா்கள் கடைசிப் போட்டியில் ஆடத் தயாராகிவருகினறார்கள். நாக்பூர் போட்டியில் தோல்வி கண்டதை அடுத்து, இநதிய வீா்கள அணை வரும் எந்தவித ஆட பாட்டமும் இன்றி மும்பை வந்து சோ்ந்து விட்டனா். அவா்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளனா்.



வெற்றி மகிழ்ச சியில் இருக்கும் அவுஸ்திரேலிய வீரா கள் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனா்.

கடைசி டெஸ்ட் போட்டியில் ரிக்கிப்பொண்டிங் களமிறங்குவார் என்று எதிா்பார்க்கப்படுகிறது. கை விரலில் ஏற்பட்ட காயம் காரணமாக இவா் முந்தைய மூன்று மோதல்களிலும் ஆடவில்லை. இவருக்குப் பதிலாக அணியில் சோ்க்கப்பட்ட கேடிக் சிறப்பாக ரன் குவித்து வருகிறார் எனவே யாருக்குப் பதிலாக ரிக்கிப்பொண்டிங அணியில் இடம்பிடிப்பார் என்ற குழப்பம் அதிகரித்துள்ளது.

இந்தியாவுடன் டெஸ்ட் வாழ்க்கையைத் தொடங்கிய கிளார்க்கும் ஓட்டம் குவிக்கும பணியை சிறப்பாகச் செய்துள்ளார். தொடரை வெனறு விட்டதால் ஒரு சிலருக்கு ஓய்வு கொடுக்கப்படவும் வாய்ப்பு உள்ளதாக தெரிகிறது.

எந்த மோதலிலும் ஆடாத பிரெட்லிக்கும் கடைசி மோதலில் வாய்ப்புக் கிடைக்கலாம் எனக கூறப்படுகிறது. லக்ஷ்மன் தொடா்ந்து மோசமாக ஆடி வந்த போதும் அவருக்கு மும்பை போட்டியில் கடைசியாக வாய்ப்புக்கொடுக்க அவுஸ்திரேலியா அணி முடிவு செய்துள்ளது. (ப)

# வெல்லப்போவது யார்...?

அமெரிக்காவில் அதிபர் தேர்தல் இன்று நடைபெறவிருக்கிறது. இதில் தற்போதைய அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷிற்கும் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஜோன் கெரிக்கும இடையே நூலிழை வித்தியாசத்தில் வெற்றிவாயப்பு இருந்து வருகிறது.

அமெரிக்க அதிபர் தேர்தல் தொடர்பாக நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் இந்த விபரம் தெரியவந்துள்ளது.

அதிபர் தேர்தலில் யாருக்கு வெற்றி வாய்ப்பு என்பது குறித்து மூன்று தினங்களுக்கு முன்பு கருத்துக்கணப்பு நடத்தப்பட்டது. இதன் விபரம் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையில் வெளியாகியுள்ளன,




அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு 50 சதவீத ஆதரவு உள்ளது. இவரை எதிர்த்துப் போட்டியிடும் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஜோன் கெரிக்கு 44 சதவீதமும் சுயேச்சை வேட்பாளருக்கு ஒரு சதவீத ஆதரவும் காணப்படுகிறது.

கருத்துக்கணிப்பில் ஜோர்ஜ் புஷ் முன்னிலையில் இருந்துவந்தபோதிலும் வாக்குப் பதிவைப் பொறுத்தே முடிவு தெரிய வரும்.

ஏனெனில் இதற்கு முன்பு நடத்தப் பட்ட கருத்துக்கணிப்பில் புஷ்ஷுக்கு 48 சதவதமும், கெரிக்கு 46 சதவீதமும் ஆதரவு இருந்தது. இதனால் இருவருக்குமிடையே கடும் போட்டி நிலவுவது தெளிவாகத் தெரிகிறது.

புதிய வாக்காளர்களைப் பொறுத்தவரை புஷ்ஷுக்கு ஆதரவாக வாக்களிப்பார்களா அல்லது கெரிக்கு ஆதரவாக வாக்களிப்பார்களா என்பது தெரியவில்லை. புதிய வாக்காளர்கள், பெரும் குழப்பத்தில் இருந்துவருகின்றனர்.

இந்நிலையில் சர்வதேச பயங்கரவாதி பின்லேடன் உரையாற்றும் வீடியோ ரேப் வெளியாகியுள்ளது. அமெரிக்காவை மிரட்டும் தொனியில் பின்லேடனின் பேசசு அமைந்துள்ளது. பின்லேடனை உயிருடனோ அல்லது பிணமாகவோ கொண்டுவர ஏற்பாடு செய்யப்படும் என மூன்றாண்டுகளுக்கு முன்பு புஷ் உறுதி கூறியிருந்தார். அந்த வாக்குறுதியை புஷ் நிறைவேற்றவில்லை.



இது அவருக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி வருகிறது. எனினும் புளோரிடா மாகாணத்தில் புஷ்ஷுக்குக் கூடுதல் ஆதரவு காணப்படுகிறது. மேலும் புஷ்ஷின் சகோதரர் ஜெப் புஷ் இங்கு ஆளுநராகப் பதவி வகித்து வருகிறார். அவர் மேற்கொண்டுவரும் தீவிரப் பிரசாரம் புஷ்ஷின் வெற்றிவாய்ப்புக்குக் கூடுதல் பலம் சேர்த்துவருகிறது.

இது இவ்வாறிருக்க, அமெரிக்கா மது தீவிரவாதத் தாக்குதலகள் நடத்தப்படும் என அல்-

## "ஒஸாமாவின் எச்சரிக்கையால் அமெரிக்க தேர்தலின் பெரும் திருப்புமுனை"

கெய்டா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒஸாமா பின்லேடன் பகிரங்கமாக எச்சரித்துள்ளார்.

ஒஸாமாவை ஒழித்துக்கட்டுவதற்குப் பல்வேறு பிரகடனங்களுடனும் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளில் தோல்வி கண்டுள்ள புஷ் மீண்டும் ஆட்சிக்கு வருவதால் பயங்கரவாதத்தால் அமெரிக்காவிற்குள்ள அச்சுறுத்தல்கள நீங்கிவிடப்போவதில்லை என்ற நம்பிக்கை மக்களிடையே தோன்றியுள்ளது.

இந்நிலையில் ஒஸாமா பின்லேடனின் தாக்குதல் அறிவிப்பிற்குப் பின்னர் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்புகளில் ஜோன் கெரிகக் 47 சதவீதம் பேரும், புஷ்ஷுக்கு 46 சதவீதம் பேரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தீவிரவாதிகளிடமிருந்து அமெரிக்காவைப் பாதுகாப்பதையே புஷ் தனது தேர்தல் பிரசாரத்தில் முக்கிய பிரச்சினையாக வைத்துள்ளார். எனவே பின்லேடனின



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் கெரி தேஸ் மொய்னஸ் என்ற இடத்தில் ஹோட்டலுக்குச் சென்று நண்பர்களுடன் பீர் அருந்திய காட்சி.

எச்சரிக்கை புஷ்ஷுக்குச் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எதிர்மறை விளைவை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்கள் போடும் ஓட்டுக்களை வைத்து வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்படுவது இல்லை. தேர்தல் சபை ஓட்டுக்களை வைத்தே வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்படுகிறது.

ஒரு மாநிலத்தின் அளவை வைத்து அந்த மாநிலத்துக்குத் தேர்தல்சபை ஓட்டுக்கள் கொடுக்கப்படுகின்றன. ஒரு மாநிலத்தில் எந்த வேட்பாளர் அதிக ஓட்டுப் பெறுகிறாரோ, அந்த மாநிலத் தேர்தல்சபை ஓட்டுகள் அனைத்தும் அந்த வேட்பாளருக்குச் சேர்ந்துவிடும்.

அதிபர் தேர்தலில் வெற்றிபெற ஒரு வேட்பாளர் 270 தேர்தல் சபை ஓட்டுக்கள் பெறவேண்டும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜோர்ஜ் புஷ் 270 தேர்தல்சபை ஓட்டுக்கள் பெற்றார். ஆனால் எதிர்த்துப் போட்டியிட அல்கோரே 168 தேர்தல் சபை ஓட்டுக்கள்தான் வாங்கினார். அதேசமயம் வாக்காளர் போட்ட ஓட்டுக்களில் புஷ்ஷை விட அல்கோரே 5 இலட்சம் ஓட்டுக்கள் அதிகம் பெற்றும் அவர் ஜனாதிபதியாக முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உலக அரசியலில் பாரிய மாற்றத்தை உருவாக்கப்போகும் அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவுகள் ஜோன் கெரிக்குச் சாதகமாக அமையும் என்ற எதிர்பார்ப்பும் வலுப்பெற்றிருக்கின்றது. ஏனெனில் பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற பிரகடனத்தில் புஷ் தோல்வி கண்டுள்ளமை கெரிக்கு அதிக வாய்ப்பை அள்ளித்தந்திருக்கிறது.

எது எவ்வாவறு இருப்பினும் தேர்தல் முடிவுகள் வாக்காளர்களது இறுதிநேர மனநிலையில் தங்கியிருப்பதால் எதையும் உறுதிபடக் கூறிவிட முடியாதநிலை உள்ளது.

எனவே அமெரிக்க அதிபர் கெரியா? புஷ்ஷா? என்ற போட்டியில் வெல்வது யார் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போமே.

(ப)

## நேபாள இராணுவத்தினரால் 10 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

(காத்மண்டு)

கடந்த இருநாட்களில் 10 மாவோயிஸ்டுகளைச் சுட்டுக்கொன்றுள்ளது நேபாள இராணுவம்.

இந்துமத விழாவை முன்னிட்டு தீவிரவாதிகளும் அரசும் தற்காலிகச் சண்டை நிறுத்தத்தை அறிவித்திருந்தன.

இதைத் தொடர அரசு நிபந்தனை விதித்திருந்தது.

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் நாட்டின் பல பகுதிகளிலும் தீவிரவாதிகளுக்கும் அரசுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இந்த மோதல்களின்போதே 10 தீவிரவாதிகள் நேபாள இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். (ற)




### புற்றுநோய் மீண்டும் வருவதைத் தடுக்க மருந்து

(வோஷிங்டன்)

மார்பகப் புற்றுநோய்காகச் சிகிச்சை பெற்ற பெண்களுக்கு மீண்டும் நோய் தாக்காமல் இருப்பதற்கான மருந்து தயாரிப்புக்கு அமெரிக்க மருந்து கட்டுப்பாட்டு நிறுவனம் அனுமதி வழங்கியுள்ளது.

நோவார்டிஸ் நிறுவன ஃபெமரா மாத்திரைகளைத் தற்போது தயாரித்துள்ளது. தினமும் உட்கொள்ளப்பட வேண்டிய இந்த மாததிரைகளுக்கு ஒருமாதம ஆகும் செலவு ஆயிரத்து 500 இந்திய ரூபாய்களாகும்.

பிற முறைகளில் 5 ஆண்டு சிகிச்சை பெற்ற பெண்களுக்கு இந்த மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. (ற)

## யஸீரின் உடலை ஜெருசலேமில் அடக்கம்செய்ய அனுமதிக்கமுடியாது

### இஸ்ரேல் அரசு அறிவிப்பு



(ஜெருசலேம்)

பாரிசில் சிகிச்சை பெற்றுவரும் பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத், இறந்தால அவரது உடலை இஸ்ரேலியத் தலைநகர் ஜெருசலேமில் அடக்கம்செய்ய இஸ்ரேல் அரசு மறுத்துள்ளது.

அரபாத் வெளிநாட்டில் சென்று சிகிச்சைபெற இஸ்ரேல் வான் எல்லையைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதியளித்துள்ள இஸ்ரேல் அரசு, அவரின் உடலை அடக்கம்செய்ய இடம்தர மறுத்துள்ளன.

ஆனால் அரபாத் ஒருவேளை தாம் இறந்தால் தனது உடலை இஸ்ரேல் பிடியில உள்ள ஜெருசலேமில் அடக்கம் செய்யவேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

எனினும் பலஸ்தீன மக்களுக்கு ஒருதுளி இடமேனும் கிடையாது என்ற பிரகடனத்தினடிப்படையில இஸ்ரேல் தெரிவித்துள்ள மறுப்பால் பலஸ்தீனர்கள் கொதிப்படைந்துள்ளனர். (ப)



மறைந்த முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் 20ஆவ்து நினைவுதினத்தையொட்டி டில்லியில் உள்ள அவரது சமாதியில் காங்கிரஸ் தலைவர் சோனியாவும், ராகுல் காந்தியும் நேற்று முன்தினம் அஞ்சலி செலுத்திய காட்சி.

# க.பொ.த (சாதாரண தரம்)
# மாதிரிப் பரீட்சை - 2004

நேரம்: 1மணி **சமூகக்கல்வியும் வரலாறும் பகுதி I**

ஆக்கம்: யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்.

**1முதல் 40 வரையான வினாக்களின் சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக. உலகப்படத்தைப் பயன்படுத்தி 1-5 வரையான வினாக்களுக்கு விடை தருக.**



01.சேது சமுத்திரத்திட்டம் செயற்படுத்தப்பட இருக்கும் நீரிணையைக் குறிப்பது
i)A ii)B iii)C iv)D


02.தெற்காசியாவின் 10ஆவது விளையாட்டுப் போட்டி நடைபெற உள்ள நாடு
i)J ii)G iii)H iv)I

03.சென்றமாதம் வெள்ளப்பெருக்கிற்குள்ளான ஆசிய நாடு
i)G ii)H iii)I iv)J

04.உலகப்படத்தில் வரையப்பட்டுள்ள அகலக்கோட்டின் பெயர்
i)மகரக்கோடு ii)அந்தாட்டிக்கோடு iii)மத்தியகோடு iv)கடகக்கோடு

05.இவ்வாண்டின் நடுப்பகுதியில் பூமியதிர்ச்சி காரணமாக பெருந்தொகையானோர் (50,000) இறந்த நாடு
i)G ii)V iii)X iv)Y

**6-10 வரையான வினாக்களுக்கு இலங்கைப்படத்தைப் பயன்படுத்தி விடை தருக.**



06.ஆற்றுநீரின் வேகம் குறைந்த இடங்களில் அணை அமைத்து கால்வாயூடாக நீர் வழங்கப்பட்டிருப்பதைக் குறிக்கும் எழுத்து
i)A ii)B iii)C iv)D

07.நியொப் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி இடம்பெறும் மாகாணம்
i) 1 ii) 2 iii) 3 iv) 4

08.மாதுறுஓயா நீர்த்தேக்கத்தைக் குறித்துக் காட்டும் எழுத்து
i)H ii)J iii)G iv)F

09.சபகஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பு ஆலை அமைந்துள்ள இடம்.
i)L ii)M iii)N iv)O

10.இலகு கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடமான பதியகம்பளை அமைந்த இடத்தைக் குறிக்கும் எழுத்து
i)R ii)S iii)T iv)U

11.மிதிவெடிகளின் உற்பத்தி, பாவனைக் கையிருப்பு, விற்பனை ஆகிய வற்றைத் தடைசெய்யும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட ஆண்டு
i)1997 ii)1985 iii)1992 iv)1990

12.இக்கோ சொக் என்று சுருக்கமாக அழைக்கப்படுவது
i)நம்பிக்கைப் பொறுப்புகள் ii)பொருளாதார சமூகசபை
iii)இணை நிறுவனங்களின் சபை iv)நீதிமன்றச் சபை

13.இலங்கை யாத்திரிகருக்காக புத்தகாயாவில் மண்டபம் கட்டிய மன்னன்
i)சமுத்திர குப்தன் ii)அக்பர் iii)கீர்த்தி ஸ்ரீமேவன் iv)விஜயபாகு

14.அங்டாட் நிறுவனத்தின் தலைமைச் செயலகம் அமைந்துள்ள இடம்
i)மனிலா ii)ஜெனீவா iii)லண்டன் iv)ஒட்டாவா

15.இலங்கையர் அனைவருக்கும் வாக்களிக்கும் வாய்ப்பை வழங்கிய யாப்புச் சீர்திருத்தம்
i)டொனமூர் ii)மனிங் iii)சோல்பரி iv)கோல்புறூக்

16.இலங்கையை ஆக்கிரமிப்பதற்கான குழுவினராக வருகைதந்தவர்கள்
i)விஜயனும் குழுவினரும் ii)சேனனும் குத்திகனும்
iii)பண்டுவாசுதேவனும் குழுவினரும் iv)றோஹணவிஜித குழுவினர்

17.துரித மகாவலித்திட்டத்தில் அமைந்த பாரிய நீர்த்தேக்கமும் கூடிய மின் ஆற்றல்கொண்ட நீர்த்தேக்கமும் முறையே,
i)மாதுறுஓயா, கொத்மலை ii)இரந்தனிகல, விக்டோரியா
iii)விக்டோரியா, பொல்கால்ல iv)மாதுறுஓயா, இரந்தனிகல

18.திரியாய தாகபை தொடர்பான சரியான கூற்று
i)புத்தர் வந்திறங்கிய தாகபை
ii)இலங்கையின் முதலாவது தாகபை
iii)புத்திரின் வலது காறை எலும்பு வைத்துக்கட்டப்பட்ட தாகபை
iv)புத்தரின் புனித கேசம் வைத்துக் கட்டப்பட்ட தாகபை

19."அ" நிரலில் உள்ளவை "ஆ" நிரலில் உள்ளவற்றுடன் பொருந்தினால் வரும் சரியான விடை ஒழுங்கு

| | |
|---|---|
| கோகணை | 1.காஸா |
| பாய்பின்னுதல் | 2.ஈரான் |
| இஸ்ரேல் | 3.திக்ரிக் |
| 2003ற்கான சமாதான நோபல் பரிசு | 4.திருகோணமலை |
| சதாம் உசைன் | 5.தும்பறை மிடடியாவத்தை |

i)4,3,2,1,5 ii)5,4,1,2,3 iii)3,4,5,1,2 iv)4,5,1,2,3

20.அனுராதபுர காலத்தில் வைத்தியசாலைகளை அமைத்த மன்னர்கள் எனக் கருதப்படுவோர்
i)1ம் அக்போ, 1ம் மகிந்தன், 2ம் சேனன், 1ம் பராக்கிரமபாகு
ii)2ம் காசியப்பன், 5ம் காசியப்பன், 1ம் சேனன், 2ம் சேனன்
iii)5ம் காசியப்பன், 1ம் சேனன், 2ம் சேனன், 1ம் அக்போ
iv)1ம் அக்போ, தாதுசேனன், புத்ததாசன், 1ம் பராக்கிரமபாகு

21.கண்டி இராச்சியத்தில் இருந்ததாகக் கூறப்படும் கைத்தொழில்
i)சாயவேலைக் கைத்தொழில் ii)கப்பல் தயாரிக்கும் கைத்தொழில்
iii)உலோகக் கைத்தொழில் iv)மீனவக் கைத்தொழில்

22.சிறுவர்களின் நீண்டகால சமூக அபிவிருத்தியையும் உரிமைகளையும் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட சர்வதேச நிறுவனம்
i)UNESCO ii)UNICEF iii)ASENA iv)GTZ

23.புராதனகாலத்தில் அனான்னிக நிஸ என்ற அலுவலகர் எத்துறைக்கு நியமிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது
i)வைத்தியத்துறை ii)நீர்ப்பாசனத்துறை
iii)வர்த்தகத்துறை iv)நீதித்துறை

24.சூழல் மாசடைவதற்குப் பிரதான காரணியாக அமைவது
i)நவீன விவசாய அபிவிருத்தி முறைகள்
ii)மனித முயற்சிகளும் செயற்பாடுகளும்
iii)நாடுகளுக்கிடையிலான போட்டிகள்
iv)அரசியல் நடவடிக்கைகள்

25.அலகர, அங்கமடில்ல, மினிப்பே, ஜயகங்கை ஆகிய கால்வாய்கள் அமைத்த மன்னர்களின் ஒழுங்கு
i)1ம் பராக்கிரமபாகு, வசபன், 1ம் அக்போ, தாதுசேனன்
ii)வசபன், 1ம் அக்போ, தாதுசேனன், 1ம் பராக்கிரமபாகு
iii)1ம் பராக்கிரமபாகு, 1ம் அக்போ, தாதுசேனன், வசபன்
iv)வசபன், 1ம் பராக்கிரமபாகு, 1ம் அக்போ, தாதுசேனன்

26.இன்று அபிவிருத்தியடைந்த நாடுகளின் வியாபார நடவடிக்கைகளில் எதிர்பாராத தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள முக்கிய முறையானது
i)அகதிகளின் குடியேற்றத்திலான சுமை
ii)கைத்தொழிலில் துரித முன்னேற்றம் பெற்ற தைவான் தென்கொரியா போன்றவை கைத்தொழிற் சந்தையை நெருங்கியமை
iii)நில நடுக்கம் காலநிலை என்பவற்றின் தாக்கங்கள்
iv)சூழல் மோசமாகப் பாதிக்கப்பட்டமை

27.இலங்கையின் சர்வதேச வர்த்தக நடவடிக்கைகள் மேலும் விரிவடையக் காரணமானது
i)கைத்தொழிலின் துரித வளர்ச்சி
ii)இலங்கைப் பொருட்கள் தரத்தில் மேம்பட்டவை
iii)அரசாங்கம் மேற்கொள்ளும் திறந்த பொருளாதாரக் கொள்கை
iv)ஆடைக் கைத்தொழில் வளர்ச்சி கண்டமை.

28.பொதுநலவாயத்தில் உள்ள நாடுகளில் கிரனடா, பாபடோஸ், கோடலு, சென்கீற்ஸ் போன்றவை அமைந்துள்ள பகுதி
i)கிழக்கிந்தியத தீவுககூட்டத்தில் ii)தென்பசுபிக்கில்
iii)மேற்கிந்தியத் தீவுககூட்டத்தில் iv)கிழக்காசியத் தவுககூட்டத்தில்

29.மிதிவெடி, கண்ணிவெடி தொடர்பான தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத நாடு அல்லாதது
i)ஐக்கிய அமெரிக்கா ii)ஐக்கிய இராச்சியம்
iii)சீனா iv)தென்னாபிரிக்கா

30.கண்ணிவெடிகளை அகற்றுதல் தொடர்பான படிமுறைகள் சில தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தினால் வரும் சரியான ஒழுங்கு
1.தொழில்நுட்ப ரீதியிலான மதிப்பீடு
2.சமூக பொருளாதார செயற்பாடுகளின் தாக்கம் பற்றிய மதிப்பீடு
3.கண்ணிவெடி அகற்றப்பட்டதனை உறுதிசெய்தல்
4.கண்ணிவெடி அகற்றுதல்
i)2,3,4,1 ii)2,4,3,1 iii)2,1,4,3, iv)1,2,4,3

31.ஜனநாயக நிர்வாகமுறை வெற்றியடைவதற்கு மிகவும் பொருத்தமான காரணி
i)அரசியல் அறிவு படைத்த மக்கள் இருத்தல்
ii)பொருளாதாரம் கீழ்மட்டத்தில் இருத்தல்
iii)இரண்டு அரசியல் கட்சிகள் மட்டும் இருத்தல்
iv)சுதந்திரமான வெகுசனத் தொடர்புமுறை இருத்தல்.

(08 ஆம் பக்கம் பார்க்க......)

# அரசியல் சாசனத்துக்கே அபகீர்த்தி

உள்துறை அமைச்சருடன் ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் என்ற முறையில் நடத்திய தொலைபேசி உரையாடலை இரகசியமாகப் பதிவுசெய்து அதைச சாட்சியமாகப பயனபடுத்த உச்ச நீதிமன்றத்தில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா சமர்ப்பித்தது மாத்திரமன்றி ஊடகங்கள் மூலமும் பகிரங்கப்படுத்தியது அரசியல் சாசனத்திற்கு முரணானது என்று பல்வேறு கட்சித் தலைவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

உள்துறை அமைச்சருடனான உரையாடலைப் பகிரங்கப்படுத்தியதால் ஜெயலலீதா முதலமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டுமென்றும் ,அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழக ஆளுநரை மாற்றுவது குறித்தும் புதிய ஆளுநரை நியமிப்பது குறித்தும் மததிய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய உரையாடல் இரகசியமாகப் பதிவு



சட்டம், ஒழுங்கு சீர்குலைந்ததற்கான சான்றுகளாக ராம்மோகன் ராவுக்குத் தெரியவில்லையா என்று வினவியுள்ளார். மேலும் ஆளுநர் மாற்றத்துக்கெதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்த மனுவில் அரசியல்வாதிபோல் தலைமைச் செயலர் செயற்பட்ட அம்சங்களை அவர் எடுத்துக்காட்டியுள்ளார். இந்த அளவுக்கு ஆளும் கட்சியின் உறுப்பினரைப் போலச் செயற்படுபவர் தலைமைச் செயலராக இருக்கலாமா என்றும் கருணாநிதி கேட்டுள்ளார்.

இவ்வளவு அரசியல் சூறாவளிக்கும் மத்தியில், மத்திய அரசு எதுவித கருத்துக்களையும் வெளியிடாமலிருப்பது தமிழக அரசியலில் பலவித ஊகங்களை ஏற்படுத்தியுள்ளது. மத்திய அரசு ஏதோவொரு திட்டத்துடன் மெதுவாகக் காய்நகர்த்தலில் ஈடுபட்டு வருவதாகப் பலர் கருதுகிறார்கள். இதன் முதற்படியாக ராம்மோகன் ராவின் இடயல் சாசனத்துக்கு விரோதமாக நடந்துகொண்ட ஜெயலலிதா மீது அரசியல் சாசன ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்குமுன் அவரது நடவடிக்கைகள் கூர்ந்து கவனிக்கப்பட்டு வருவதாகவும், எந்த நேரத்திலும் மத்திய அரசின் நடவடிக்கை என்னவென்த் தெரிய வரலாம் எனவும் தெரிகிறது.

ஜெயலலிதா பதவிக்கு வந்த நாள் முதல் இற்றை வரை முன்னாள் ஆளுநரால் கிடப்பில் போடப்பட்டிருந்த பல விடயங்கள் புதிய ஆளுநரால் மறுபரிசீலனை செய்யப்பட்டு மத்திய அரசுக்குச் சமர்ப்பிக்கப்படுமெனவும், அந்த அறிக்கை கிடைத்த பின்னரே மத்திய அரசு தனது அடுத்த கட்ட நடவடிக்கையை ஆரம்பிக்கும் என்றும் அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

என்ன நடவடிக்கை எடுப்பது என்பதை மத்திய அரசு ஏற்கனவே முடிவு செய்துவிட்டதாகவும், சம்பிரதாயத்துக்காகப் புதிய ஆளுநரின் அறிக்கையை எதிர்பாத்திருப்பதாகவும், ஜெயலலிதா புதிதாகச் சிருஷ்டித்த முன்னுதாரண நடவடிக்கையை முளையிலேயே கிள்ளியெறியாவிட்டால் கூட்டாட்சித் தத்துவமே கிள்ளுக்கீரையாகி விடுமென்று

சிபி

# ஜெயலலிதாவை சாடும் கண்டனக் கணைகள்

செய்யப்பட்டு உச்ச நீதிமன்றத்தில் ஆளுநர் மாற்றம் தொடர்பான வழக்கில் தாக்கல் செய்யப்பட்டது. இது அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என்று பல்வேறு கட்சித் தலைவர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஜெயலலிதாவீன் இச்செயல் ஜனநாயகத்துக்கு விரோதமானது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

அரசியல் ஜனநாயகத்துக்கு இதுவொரு தாக்குதலாக அமைந்திருக்கிறது. ஒரு கூட்டாட்சியில் மத்திய அரசுடன் ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் முரண்படலாம் ஆனால் தொலைபேசி உரையாடலைப் பதிவு செய்து பகிரங்கப்படுத்தி ஒரு அரசியலை நடத்துவதென்பது நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற கூட்டாட்சி முறைக்கும் நல்லதல்ல; அரசியல் சாசனத்திற்கும் நல்லதல்ல; ஜனநாயகத்துக்கும் நல்லதல்ல என்று இடதுசாரித் தலைவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

மத்திய அமைசசரின் தொலைபேசி உரையாடலை ஜெயலலிதா இரகசியமாகப் பதிவுசெய்து பகிரங்கப்படுத்தியிருப்பது அரசியல் அநாகரீகம் என்றும் ஜெயலலிதா முதலமைச்சர் பதவியிலிருந்து இராஜிநாமாச் செய்யவேண்டுமென்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

மத்திய அமைச்சர் சிவராஜ் பட்டேலோடு தமிழக முதலமைச்சர் தொர்லைபேசியில் பேசிய இரகசியங்களை மாநில அரசின் சார்பாக தலைமைச் செயலாளர் உச்ச நீதிமன்றத்தில் சத்தியக்கடுதாசியாகச் சமர்ப்பித்திருப்பது கண்டிக்கத்தக்கது. இரகசியககாப்புப் பிரமாணத்தை மீறி முதலமைசசர் இவ்வாறு செய்திருக்கிறார். ஓர் அரசியல்வாதியைப் போல தமிழக அரசின் தலைமைச் செயலர் நடந்துகொண்டிருக்கிறார். ஓர் அரச ஊழியர் இவ்வாறு நடந்து கொண்டிருப்பது மிகவும் கண்டிக்கப்படவேண்டிய விடயமாகும். இத்தகைய மன்னிக்க முடியாத அரசியல் தவறைச் செய்தவர்கள் பதவியை இராஜிநாமாச் செய்ய வேண்டுமென வற்புறுத்துவது நியாயமானதே என்றார் முதுபெரும் அரசியல்வாதியொருவர்.

அரசியல் அநாகரீகத்தின் உச்சக்கட்டமாக இச்செயல் இருக்கிறது. உடனடியாக முதல்வர் தனது பதவியை இராஜிநாமாச் செய்வதுதான் நல்ல அரசியலுக்கு எடுத்துக்காட்டாக இருக்க முடியும் என்றார் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஜீ.கே.வாசன்.

இதனிடையே ஜெயலலிதாவின் இச்செயலைக் கண்டித்து பா.ம.க நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் மத்திய அமைச்சருடன் நடந்த உரையாடலை வெளியிட்டதன் மூலம் முதலமைச்சர் பதவியை ஏற்றுககொண்டபோது அவர் எடுத்துக்கொண்ட இரகசியக் காப்புப் பிரமாணத்தை அவர் மீறி விட்டதாகத தெரிவித்துள்ளார். இதனால் அவர் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது பற்றி ஆளும்கட்சியே விளக்கம் தராத நிலையில் அக்கட்சிக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு பதவி விலகும் ஆளுநர் ராம்மோகன் ராவ விளக்கமளித்திருப்பதற்கு தி.மு.க.தலைவர் கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழக நாளேடுகளில் அன்றாடம் நடைபெறும் கொலை, கொள்ளைகள் பற்றிய பிரச்சினைகள், எதிர்க்கட்சிகள் மீது அவதூறு வழக்குகள், பொடா சட்டத்தின் கீழ் வை.கோ உள்ளிட்டோரைச் சிறையில் அடைத்த கொடுமை, காவல்துறை அதிகாரிகளே பாலியல் வன்முறை முதலான குற்றச்சாட்டுகளுக்குள் சிக்கியது உள்ளிட்டவற்றைப் பட்டியலிட்ட கருணாநிதி இவையெல்லாம்

த்துக்கு பர்னாலா ஆளுநராக நியமிக்கப்பட்டதை அவர்கள் எடுத்துக்காட்டுகிறார்கள். அரசி

மத்திய அரசு கருதுவதாகவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## இலங்கைக்கும் எகிப்துக்குமிடையிலான
## சுதந்திர வர்த்தக உடன்படிக்கை
# ஜனவரி முதல் நடைமுறைக்கு வரும்

(கொழும்பு)

இலங்கைக்கும் - எகிப்துக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை எதிர்வரும் ஜனவரிமாதம் முதல் நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கபபடுகிறது.

இந்த உடன்படிக்கை தொடர்பான இறுதிக்கட்டங்களை நிறைவேற்ற ஆசிய அலுவல்களுக்கான எகிப்திய உதவி வெளிநாட்டு அமைசசர் கலாநிதி எஸாட ஸாட் எல்செயிஸ் கொழும்பு வந்துள்ளார்.

5கோடி அமெரிக்கடொலர் மதிப்புள்ள பொருட்களைப் பரிமாற்றஞ் செய்ய இந்தச் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை வழி சமைக்கும்.

அத்துடன் இந்த உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கை-எகிப்துக்கான தேயிலை ஏற்றுமதியை மீண்டும் ஆரம்பிக்கலாம் எனவும் கூறப்படுகின்றது,

முன்னாள் எகிப்துக்குத் தேவையான தேயிலையில் 80சதவீதத்தை இலங்கை வழங்கி வந்தது. பின்னர் வேறு சில நாடுகளின் தேயிலை எகிப்துக்கு இறக்குமதி செய்யப்பட்டதால் இலங்கைத் தேயிலைக்கு அங்கு மதிப்புக் குறைந்தது.

இந்த நிலைமையை மாற்றி மீண்டு இலங்கைத் தேயிலையை எகிப்துக்கு இறக்குமதி செய்வதற்கு இந்த உடன்படிக்கை உதவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதைத்தவிர இலங்கைக்கும் எகிப்துக்கும் இடையிலான விமானப் போக்குவரத்துச் சேவையை ஆரம்பிப்பது பற்றியும் எகிப்திய உதவி வெளிநாட்டு அமைச்சர் ஆராய்ந்து வருகிறார்.

(க-61)

(..7..தொடர்ச்சி...)

32.இலங்கையர் ஒருவரின் அடிப்படை உரிமை நிர்வாகத்துறையின் அல்லது நிறைவேற்றுத்துறையின் நடவடிக்கையில் மீறப்பட்டிருப்பது தொடர்பாக அவர் முறையீடு செய்யவேண்டிய நீதிமன்றம்

i)மேல் நீதிமன்றம் ii)மாவட்ட நீதிமன்றம்
iii)மேன்முறையீட்டு நீதிமன்றம் iv)உயர் நீதிமன்றம்

33.இன்றைய நாட்டு ஜனாதிபதிக்குப் பொறுப்பளிக்கப்பட்டிராத பணி

i)அமைச்சர்களை நியமித்தல் ii)பிரதம மந்திரியை நியமித்தல்
iii)பிரதம நீதியரசரை நியமித்தல் iv)சபாநாயகரை நியமித்தல்

34.பின்வருவனவற்றுள் மசோதா ஒன்று பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்படுவது தொடர்பான சரியான கூற்று

i)1ம் 2ம் 3ம் வாசிப்பு நிறைவேறியபின் சபாநாயகரிடம் கையொப்பம் பெறல்
ii)3ம் வாசிப்பின்பின் சபாநாயகரிடம் கையொப்பம் பெறல்
iii)3ம் வாசிப்பின் பின்னர் அரசியல் யாப்புக்கு ஏற்றது என உயர் நீதிமன்றத்தில் தீர்ப்புப் பெறல்
iv)செயற்குழு நிலையின் பின்னர் சட்டமா அதிபரிடம் முன்வைத்தல்

35.பாராளுமன்றக் கருமங்களின் ஒழுங்கமைப்பு அவற்றை நடைமுறைப்படுத்தல் ஆகிய பணிகளுக்குப் பொறுப்பானவர்

i)சபாநாயகர் ii)சபை முதல்வர்
iii)பிரதம மந்திரி iv)செயலாளர் நாயகம்

**36-40 வரையான வினாக்களுக்கு பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி விடை தருக.**

| நாடு | தலா வருமானம் | பண வீக்கம் | சனத்தொகை | சனத்தொகை வளர்ச்சி | ஆயுள் காலம் | சிசு மரணம் | எழுத்தறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| A | 783 | 0.6 | 1268.7 | 1.00 | 71 | 31 | 80 |
| B | 23403 | 1.1 | 59.1 | 2.30 | 54 | 27 | 58 |
| C | 827 | 3.4 | 19.0 | 1.20 | 72 | 14 | 92 |
| D | 289 | 5.5 | 130.0 | 2.20 | 58 | 75 | 32 |
| E | 37395 | 2.6 | 273.0 | 1.60 | 77 | 7 | 96 |
| F | 30340 | 0.2 | 126.0 | 0.30 | 80 | 4 | 100 |

36.மிகவுயர்ந்த வாழக்கைத்தரம் காணப்படும் நாடுகள் குறிககும் எழுத்துககள்

i)BF ii)BE iii)EF iv)CB

37.சமூகநல சேவைகள் வளர்ச்சியடைந்து காணப்பட்டாலும் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்துவரும் நாடாகவே காணப்படும் நாடு

i)A ii)B iii)C iv)D

38.சீனா ஜப்பான் ஆகிய நாடுகளின் தரவுகளைக் குறிக்கும் எழுத்துக்கள்

i)AF ii)AE iii)AB iv)EF

39.ஆகக்குறைந்த சமூக பொருளாதார நிலைமையைக் கொண்ட நாடு

i)A ii)B iii)C iv)D

40.தரப்பட்ட தரவுகளுக்கு அமையப் பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

i)தரப்பட்ட தரவுகள் பௌதிக வாழ்க்கைத்தரச் சுட்டியைத் தயாரிக்கப் போதுமானது
ii)Bஎன்பது அபிவிருத்தி அடைந்த ஒரு நாடு
iii)Cநாட்டின் தரவுகள் இலங்கையை ஒத்துக் காணப்படுகிறது.

# ஐயங்கள் ஆயிரம்
## பேய் இருப்பது உண்மையா?


உலகில் நிறைய நிகழ்ச்சிகள் அமானுஷ்யமாக இருக்கின்றன. கடவுள் என்று சொல்லிக்கொள்பவர்கள் முதல பில்லி சூனியம் எடுப்பவர்கள வரையிலும விஞ்ஞான விதிகளுக்கு உட்படாத நிகழ்ச்சிகளை செய்கிறார்கள். இதை இரண்டு விதமாக விளக்கலாம்.

நமது சட உலகின் இயல்பியல் விதிகளை மீறிச் செயற்படும் ஆற்றலும் பொருளும் இருக்கலாம் என்பது அனைத்துமே மாயாஜால வித்தை... மேடையில் மஜிக் செய்பவர்கள் பொருளை மறைத்து மறுபடியும் கண்முன் தோன்றவைக்கிறார்கள்... அதுபோல ஒரு ஏமாறறு விதததை எனறு கூறுவது இன்னொரு விளக்கம்.

இரணடில் ஏதாவதொன்று சரியானதாக இருக்கலாம். அலலது இரண்டுமற்ற மூன்றாவதாகவும் இருக்கலாம். உண்மை என்னவென்றால் அதுபோன்ற நிகழ்ச்சிகள் உள்ளன என்பதுதான்.

அவரவர் நம்பிக்கைக்கு ஏற்ப மேற்கூறிய இரண்டில் ஏதாவதொன்றை ஏற்றுக்கொளளலாம். விஞ்ஞானம இதில் தலையிடுவது இல்லை.

# பேனா நண்பர்கள்



தௌ. யோகேந்திரன்
வயது:- 18
இல.6 முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைக்காட்சி, பத்திரிகை.



மும்பையில் திருமணமான பெண்களில் அழகானவர்களைத் தெரிவுசெய்து ஒரு அலங்கார அணிவகுப்பு நடத்தப்பட்டது. அதில் முன்னாள் இந்தியா அழகி திருமதி கிஷோரி ஷேனியுடன் பங்கேற்ற அழகிகளைப் படத்தில் காணலாம்.

மொகாலியல், நாய்களுக்கான ஓட்டப்பந்தயம் நடந்தது. அப்போது அதில் பங்கேற்ற நாய்கள் பாய்ந்து ஓடுவதைப் படத்தில் காணலாம்.



# இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல - 34

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?

அமெரிக்க வல்லாதிக்க அரசுக்குச் சவாலாக விளங்கும் இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 08ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.



நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 34**
**'வலம்புரி ~ சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளா[illegible] தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம.**

**குறிப்பு:-**

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல் முறை[illegible]லம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும.

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:— 34

படத்தில் உள்ளவரின் பெயர் :-..............................

அனுப்புபவரின் முழுப்பெயர் :-..............................


அனுப்புபவரின் முகவரி :-..............................

..............................

..............................

### இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல-32
### சரியான விடை





**ஜோன் கெரி**

### இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 32இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | சா. சுகந்தினி, பிரதான வீதி, சுன்னாகம். |
| இரணடாம் பரிசு | :- | பா. ஹரிகரன், கலைமகள் வீதி, அரியாலை. |
| மூன்றாம் பரிசு | :- | க. கபிலன், நீர்வேலி வடக்கு, நீர்வேலி. |

### சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்

S.பிரபாகர், முலலைத்தீவு. S.தர்ஷினி, மானிப்பாய். L.கீர்த்திகா, வல்வெட்டி. சு. விதுஷன், வண்ணார்பண்ணை. லோ. சுவஸ்திகா, உடுப்பிட்டி. V.இளங்கோ, கோப்பாய். ச. அருள்அமுதா, நல்லூர். சி.விவேக், வியாபாரிமூலை. சு. நிகேதினி, யாழ்ப்பாணம். து. நக்கீரன், மல்லாகம். P.S.ராணி, வட்டுக்கோட்டை. அ.மாதொருபாகன், வல்வெட்டித்துறை. செ. சுதர்ஷன், நயினாதீவு. K.இராஜகோபால், தொல்புரம். J.கிறிஸ்தினா வசந்தராணி, யாழ்ப்பாணம். H.சுகிதா, வண்ணார்பண்ணை. க. யசிதரன், கொடிகாமம். S.சித்திரா, கொக்குவில். சி.கோணேஸ்வரி, சுன்னாகம். க.தவசீலன், கிளிநொச்சி. S.நித்தியா, கொக்குவில். பி.திவ்வியா, குருநகர். செ.பிரவீன், கைதடி. சி.சித்தார்த்தன், தரிப்பூர். இ. கவிநிலா, கிளிநொச்சி. வெ. துவாரகா, வேலணை. கோ. கோபிகா, வரணி. கா.பிரகாஷ், சுனணாகம். K.யாழினி, கொக்குவல். T.சுகந்தன், வரணியூர். A.அனித்தா, சித்தன்கேணி. அ. காந்தரூபி, அரியாலை. ஆ. அனுஷா, சித்தன்கேணி. சி. குகன், மானிப்பாய்.

# உடலை குண்டாக்கும் விற்றமின் 'டி'

விற்றமின் டி பொதுவாக சூரிய ஒளியிலிருந்து கிடைக்கின்றது. விற்றமின் டி உடலில் குறைந்தால் எலும்புகள் தொடர்பான நோய் வரும் என்பது அனைவருககும் தெரிநத விடயமே. ஆனால விற்றமின் டி அளவு மிகுவதால் உடல் பருமனடைகிறது என டென்னஸ்ஸி பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆய்வில் தெரியவந்துள்ளது.

விற்றமின் டியினால் சுரக்கப்படும் புதிய ஹார்மோன் குறித்து உயிரியல்துறை அதிக கவனத்துடன் ஆய்வுகளை மேற்கொண்டு வந்தது. இந்தக் ஹார்மோன் கான்சரைத் தடுக்கின்றது. வயோதிபத் தன்மையை எதிர்க்கின்றது. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துகின்றது எனத் தெரியவந்தன. இந்தக் ஹார்மோனுக்கு '1, 25 – டி' எனப் பெயரிடப்பட்டது.

இந்தக் ஹார்மோனுக்கு உடலைக் குண்டாக்கும் சக்தி இருப்பது தற்போது தெரியவந்துள்ளது. ஏனெனில் இந்தக் ஹார்மோன் உணவுக் பொருளை எரிப்பதா? அல்லது பிசுக்களில் கொழுப்பாகப் படியச் செய்வதா? என்று முடிவுசெய்யும் காரணியாக உள்ளது.

ஆனால் விற்றமின் டியினால் மட்டுமே இந்தக் ஹார்மோனை உருவாக்கவிட முடியாது. நம் உடலில் உள்ள கல்சியத்தினளவு குறைந்தால் இந்தக் ஹார்மோன் அதிகமாகச் சுரக்கின்றது. ஏனெனில் கல்சியம் குறைந்தால் கல்சியம் உடலுக்குச் செய்யும் பணிகளில் குறைவு ஏற்படாமல் தடுக்க பாராதைய்ராய்டு அதிகளவில் சுரக்கின்றது. பாராதைராய்டு ஹார்மோனோடு 1,25 – டி ஹார்மோனும் சுரக்கின்றது. எனவே கல்சியம் அதிகமான பொருட்களை உட்கொண்டால் 1,25 – டி ஹார்மோன் உற்பத்தியாகாது.

நமது உடலுக்கு 1200 மில்லிகிராம் கல்சியம் தேவை என உலக சுகாதார நிறுவனம் கூறுகின்றது. ஆனால் கல்சியம் மாத்திரைகளைவிட கல்சியம் உள்ள பால், பாலாடைக்கட்டி போன்ற உணவுப் பொருட்களுக்குத்தான் 1,25 – டி ஹார்மோன் உற்பத்தியை தடை செய்யும் ஆற்றல் உள்ளது என்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

வலம்புரி - சங்குநாதம் பேனாநண்பர் பகுதியில் தமது பெயாகளை பிரசுரிக்க விரும்புவோா தம்மைப் பற்றிய முழுவிபரங்களுடன் அடையாள அட்டையின் பிரதியையும் இணைதது அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

### கர்நாடக சங்கீதம் பகுதி I இன் விடைகள்

| | | |
|---|---|---|
| 01.2 | 02.1 | 03.4 |
| 04.3 | 05.2 | 06.3 |
| 07.2 | 08.3 | 09.4 |
| 10.4 | 11.2 | 12.1 |
| 13.1 | 14.3 | 15.4 |
| 16.2 | 17.1 | 18.1 |
| 19.3 | 20.4 | 21.2 |
| 22.1 | 23.3 | 24.2 |
| 25.4 | 26.4 | 27.1 |
| 28.3 | 29.2 | 30.1 |
| 31.2 | 32.3 | 33.4 |
| 34.2 | 35.3 | 36.4 |
| 37.1 | 38.4 | 39.2 |
| 40.3 | | |

அறுவைச் சிகிச்சை நிபுணர்களைப் பொறுத்தவரை, குடலிறக்க அறுவை (**Hernia operation**) அடிப்படை அறுவைச் சிகிச்சையாகும். பொது சர்ஜயன்கள் அடிக்கடி செய்யும் அறுவை அது. அறுவை மருத்துவப் பயிற்சியிலும் கூட (**Hernia Equivalents**) என்று ஒரு அந்தஸ்து வழுங்கப்பட்டு வருகின்றது.

வளவு முக்கியமானது என்று மருத்துவர்கள் எண்ணாததாலோ என்னவோ, இந்த நோக்கில் குடலிறக்க அறுவை சிகிச்சைகள் சரியான விததத்தில் அறிவியல்பூர்வமாக ஆராயப்படுவதில்லை. இது சரியல்ல. ஏனெனில், அறுவை சிகிச்சையின் முக்கியமான பயன், சாதாரண குட

அநேகமாக சுமார் 30% என்ற அளவில் மிக உயர்ந்துவருகிறது என்று தெளிவுபடுகின்றது. அதாவது முதல் குடலிறக்க அறுவைச் சிகிச் சைக்குப் பின் மீண்டும் குடலிறக்கம் உண்டானால், மீண்டும் ஒருமுறை குடலிறக்கம் உண்டாகும் வாய்ப்பு சுமார் 30 % உண்டு. குடலிறக்கக் கேசுகளில் முதன் முறையாக செய்து

நிபுணர்களை, இறுக்குக் கச்சையை விட அவ்வளவாகப் பொருட்படுத்துவதில்லை. ஆனால் அறுவை நிபுணர்களோ, இறுக்குக் கச்சை இந்த விஷயத்தில் சரியானதல்ல, சௌகரியக்குறைவானதும் பயனற்றதுமான சாதனமே அது என்று கூறிவிடுகின்றனர்.

குடலிறக்கத்தினால் ஏற்படும் அசௌகரியத்தை நீக்குவதிலும் குடலிறக்க அடைப்பைத் தடுப்பதிலும் இறுக்குக் கச்சைகளின் பயன் பற்றிய நவீன அறிவியல் பூர்வமான ஆய்வுகள் எதுவும் செய்யப்படவில்லை.

நேருவதற்கும் சந்தர்ப்பம் உண்டு! “அறுவை செய்ய வேண்டும்'' என்றால், மீண்டும் அறுவைக்குப் பிறகு அதேபோல குடலிறக்கம் தோன்ற வழியுண்டு என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி மீண்டும் மீண்டும் குடலிறக்கங்கள் திரும்பத திரும்ப நேருமானால், திரும்பத் திரும்ப அறுவைகள் மேற்கொள்ள வேண்டிவரும். இவ்வாறு மீண்டும் மீணடும் அறுவை செய்யப்படும் பொழுது மரணம் நேரும் அபாயமும் வரக்கூடும்.

குடலிறக்கம் அடைப்பாக மாறி, அல்லது நெரிவுற்ற குடலிறக்கம் உண்டாகி உயிருக்கே ஆபத்தாகிவிடும் என்ற அச்சம் எழுப்பினாலோ தான் ஒரு குடலிறக்க அறுவை செய்தாலும் செய்யாவிட்டாலும் ஏற்படப் போகும் இறப்பு அபாயத்தில் வேறுபாடு இருக்கப்போவதில்லை. ஆகையால் குடலிறக்கம் கொடுக்கும் அசௌகரியத்தின் அளவும், அறுவை செய்வதினால் இந்த அசௌகரியம் எந்த அளவு நீங்கும் என்பதும்தான் பொதுவாகப் பார்க்கப்பட வேண்டிய முக்கியமான விஷயங்கள் எனலாம்.

இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை டாக்டர் ஒருவரோடு சேர்ந்து செய்ய முற்படும்பொழுது கனவத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டிய மிக முக்கியமான கருத்துக்கள் எவை?

1.குடலிறக்கத்தினால் குடல் சிக்கிக் கொண்டு அடைப்பு ஏற்பட்டால்


# குடலிறக்கத்திற்கு

## மருத்துவ விளக்கம்

# அறுவை சிகிச்சை!

### குடலிறக்கம் என்பது என்ன?

அகராதிப்படி, உடல் திசு ஒன்று, தன்னை மூடியிருக்கும் உறை அமைப்புக்கு வெளியே துறுத்தி நிற்பது அல்லது நீங்குவது என்று



1கொப்பூழ்க்குழி சார்ந்த குடலிறக்கம் (**Umbilical hernia**) இந்த வகை ஹெர்னியா சிறு குழந்தைகளைப் பாதிக்கின்றது

பொருள்படும். உடலின் பல பகுதிகளில் இவ்வித துறுத்தல்கள் நேரக்கூடும் ஆதலால், தொடையும் அடிவயிறும் சேரும் இடத்தில் உண்டாகும். “அரையைச் சார்ந்த குடல் இறக்கம் (**Inguinal Hernia**) தொப்புழ்ககுழி சார்ந்த குடலிறக்கம் (**Umblical hernia**), இரைப்பை உதர விதானத்தைப் பிளந்து வெளிப்படும் உதரவிதான குடலிறக்கம் (**Hiatal hernia**). இன்ன பிற வகைக் குடலிறக்கங்களும் இவ்வார்த்தைக்குள் அடங்கும். இருந்தபோதிலும், “குடலிறக்கம்'' என்று தனிப்படக் கூறும்போது, அது அரையைச் சார்ந்த குடலிறக்கத்தையே குறிப்பிடும். தொடையும் அடிவயிறும் இணையும் பகுதியில் பலவீனமான இடத்தில் குடற்பகுதி வெளித்துறுத்தியவாறு நிற்பதே அரையைச் சார்ந்த குடலிறக்கம் எனப்படுகிறது. இவ்வாறு உப்பிவிடும் பலவீனமான அடிவயிற்றுப் பகுதியில், அநேகமாக அடிவயிற்றிலுள்ள ஏதாவ தொரு உறுப்பு குறிப்பாக, சிறுகுடல் பகுதி, அது மூடியிருக்கும் உறையை விட்டு நழுவி வெளிவந்து விடுவதுண்டு. சில சமயங்களில் இவ்வாறு வெளிதுறுத்தி வரும் குடற்பகுதி மீண்டும் பழையபடி உள்ளே போகாமல், வெளியிலேயே ஒரு பை போன்ற அமைப்பில் சிக்கிக்கொள்வதுமுண்டு. அதை மருத்துவர்கள் “பையடைப்புக் குடலிறக்கம்'' (**Incarceratep hernia**) என்று குறிப்பிடுகின்றனர். இவ்வாறு அந்த உறுப்பு அகப்பட்டுக்கொள்ளும்போது, அவ்வுறுப்புக்குச் செல்லவேண்டிய இரத்தவோட்டம் நின்றுபோகிறது. இப்படிப்பட்ட நிலையில் அது, “நெரிவுற்ற குடலிறக்கம்'' (**Strangulated hernia**) எனப்படுகிறது.

இங்கே நாம் ஆராயப்போவது அரையைச்சார்ந்த குடலிறக்கத்தைப் பற்றியே என்றாலும், தொடையைச் சார்ந்த குடலிறக்கத்திற்கும் அதே போன்ற அம்சங்களை வைத்து ஆராய வேண்டியுள்ளது. சிறியோரிடம் காணப்படும் கொப்பூழ்க் குழி சார்ந்த குடலிறக்கம் பற்றியும் இங்கு கூறப்படுகின்றது.

### குடலிறக்கத்தை சரிசெய்ய வேண்டியதேன்?

குடலிறக்க அறுவை சிகிச்சை மேற்கொள்ளுவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

1.அசௌகரியத்தைக் குறைக்க.

2.சாதாரண குடலிறக்கம் நெரிவுற்ற குடலிறக்கமாக மாறிவிடாமலிருக்க.

நோயாளிகள் முதல் காரணத்தை முக்கியப்படுத்துகையில், மருததுவர்கள் இரண்டாம் காரணத்தின் மீது தங்கள் கவனத்தைச் செலுத்துவார்கள். நோயாளிக்கு ஏற்படும் அசௌகரியத்தைக் குணப்படுத்த அவ்

லிறக்கம் நெரிவுற்ற குடலிறக்கமாக மாறுவதைத் தடுப்பதல்ல. மாறாக, நோயாளிக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியத்திலிருந்து விடுதலை அளிப்பதாக இருக்க வேண்டும் என்பதை அறுவை முறையைத் தேர்ந்தெடுப்பதிலும், பரிசோதிப்பதிலும் ஈடுபடும் மருத்துவர்கள் மனதிற் கொள்ளவேண்டும்.

அதேசமயத்தில் நெரிவுற்ற குடலிறக்கத்தையும் அவ்வளவு லேசாக எடுத்துக்கொள்ள இயலாது. அவசரகால சிகிச்சையில், சாதாரண குடலிறக்க அறுவை சிகிச்சையல் ஏற்படும இறப்பு அபாயத்தைப் போல் 10 முதல் 40 மடங்கு அதிகமான இறப்பு அபாயம் நெரிவுற்ற குடலிறக்க அறுவை சிகிச்சையில் உண்டாகிறது. எனவே, சாதாரண குடலிறக்க அறுவையைவிட அவசரகால நெரிவுற்ற குடலிறக்க அறுவை மிகவும் சிக்கலானது என்பதைப் பற்றிய கேள்விக்கு இடமில்லை. ஆனால் முக்கியமாக எழும் கேள்வி, சாதாரண குடலிறக்கம் எப்போது, எப்படி, நெரிவுற்ற குடலிறக்கமாக மாறும், அதற்கு எந்த அளவு சாத்தியக் கூறுகள் உள்ளன? என்பது தான். அரையைச் சார்ந்த குடலிறக்க் கேசுகளில் சுமார் 0.3 கேசுகள், ஏற்ற சிகிச்சை அளிக்காத பட்சத்தில் எப்போது வேண்டுமனாலும் நெரிவுற்ற குடலிறக்கமாக மாறக் கூடும் என்று ஒரு அரிய ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. இப்படியிருக்கையில், அவசீரகால நெரிவுற்ற குடலிறக்க அறுவை சிகிச் சைக்கான சந்தர்ப்பங்கள் வெகு குறைவாக இருக்கின்றபடியால், அந்தச் சந்தர்ப்பங்களைத் தடுப்பதற்கு இருந்து வரும் முக்கியத்துவம் மிக்க குறைவாகவே இருந்து வருகிறது.

### குடலிறக்க அறுவை சிகிச்சையில் ஏற்படும் சிக்கல்கள்

முதன் முதலில் நடத்தப்படுகின்ற சாதாரண குடலிறககத்திற்கு அறுவை சிகிச்சை செய்யும் பொழுது, மரணவிகிதம் குறைந்த பட்சம் 0.2% என்ற அளவிலும், அதிகபட்சம் 2.3% என்ற அளவிலும் உள்ளதாக ஆய்வுகள் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட அறுவை சிகிச்சைகளில் முழு மயக்கம் அளிக்கப்பட்டு, பிறகு செய்யப்படுகின்றன. இவ்வாறு முழு மயக்கம் (உடல் முழுவதையும் மயக்க முறச் செய்தல் ) அளிப்பது குறிப்பிட்ட பகுதியில் (நோய் பாதிப் பிற்குள்ளான பகுதியில்) மட்டும் அளிக்கப்படும் மயக்கத்தைவிட சிறிது சிக்கல் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

குடலிறக்கம் மீண்டும் மீண்டும் ஏற்படக்கூடியது என்பதால் “முதன முதலில் நடத்தப்படும் குடலிறக்க அறுவை'' என்று மேலே குறிப்பிட்டோம். இதனால் மீண்டும் குடலிறக்கம் உண்டாகும்போது, மீண்டும் அறுவை செய்யவேண்டியதாகிறது. உண்மையில், அது பல முறைகள் தோன்றி, பல அறுவை சிகிச்சைகள் செய்யவேண்டிய கட்டாயமும் நேர்கிறது. ஒரு முறை குடலிறக்கத்திற்காக அறுவை செய்துகொண்டதும், முதல் முறையாக மீண்டும் குடலிறக்கம் தோன்றும் அளவு, மொத்தக் கேசுகளில் ஒன்று முதல் முப்பது சதவிகிதம் இருப்பதுண்டு என்று ஆய்வுகள் அறிவித்துள்ளன. தற்போதைய நிலையில் 20 சதவிகிதம் என்ற அளவில் இருந்து வருகிறது. குடலிறக்க அறுவை சிகிச்சைக்குப் பின் மீண்டும் இரண்டாம் முறையாகக் குடலிறக்கம் ஏற்படுவது

கொள்ளும் - நோயாளியின் விருப்பத்தின்படி செய்யப்படுகிற அறுவையில (**Elective Surgery of Hernias**) உண்டாகவிருக்கும் சிக்கல்களை மனதிற்கொண்டே அறுவை சிகிச்சையின் அபாயங்களை கணக்கெடுக்க வேண்டும்.

அதைப்போலவே, மயக்க மருந்தின் விளைவாகவோ, அறுவையின் போது ஏற்படும் தொற்றுகளின் விளைவாகவோ குடலிறக்க அறுவையின்பொழுது மரணம் நேர்வதில்லை.




2.அரையைச் சார்ந்த குடலிறக்கம் (Ineuinal or femoral hernia) இது ஒரு சாதாரண வகை குடலிறக்கமாகும்.

### அறுவை சிகிச்சைக்கான மாற்று வழிகள் எவை?

அறுவைக்கு மாற்றாக ஓர் இறுக்குக கச்சையை (**Truss**) அணிந்து கொளளலாம். வேறு எதுவும் செய்ய இயலாது. குடலிறக்கத்தினால் பாதிககப்பட்ட ஒரு சிலர், அறுவை

**எச்.கே.பாக்ரு**



3.நெரிவுற்ற குடலிறக்கம் (**Strangulated hernia**) இந்த வகை மிகவும் ஆபத்தானது மரணத்தை விளைவிக்கக்கூடியது.

மேலே குறிப்பிடப்பட்டதைப் போல், குடலிறக்கம் அடைப்பாக மாறி சிக்கிக்கொள்வதற்கு ஓர் ஆண்டில் 3 % சந்தர்ப்பம் உண்டு என்று விபரமான மதிப்பீடு மூலம் தெரிய வருகிறது. அசௌகரியம் இருக்குமேயானால், அது தானே மறைவதற்கான வாய்ப்புகள் என்னவென்றோ அலலது மேலும் மோசமாவதற்கான சந்தர்ப்பங்கள் என்னவென்றோ கூறுவதற்கு அறிவியல் ஆதாரம் எதுவுமில்லை. ஆகவே, ஒன்றும் செய்யாவிடில் குடலிறக்கத்தின் நிலை அப்படியேதான் இருக்கும் என்று எண்ணுவது ஏற்றதாகத் தோன்றுகிறது.

குடலிறக்க அறுவை சிகிச்சையை மேற்கொள்வதா அல்லது கூடாதா எனறு தீர்மானிப்பதில் இவை எப்படிப் பயன்படுகின்றன?

குடலிறக்க அறுவை செய்வதா கூடாதா என்பதற்கு, “தீர்மானப் பகுப்பாய்வு'' (**decision analysis**) என்னும் முறையை ஒருவர் பயன்படுத்துவது சிறப்பு. இந்த முறையால், முதன் முறையாகச் செய்யப்படவிருககும் (**Elective operation**) அறுவையின் பலாபலன்களுடன், அவ்வாறு செய்யாமலிருப்பதால் விளையும் பலாபலன்களையும் சீர்தூக்கிப் பார்க்கப்படமுடியும். “அறுவை தேவையில்லை'' என்றால், குடலிறக்கம் நெரிவுறுவதற்கு சந்தர்ப்பங்கள் உண்டு. இவ்வாறு குடலிறக்கம் நெரிவுறுமேயானால் இறப்பு

அல்லது குடல் நெரிவுற்றுவிட்டதால் உயிருக்கு ஆபத்தாக முடியும் என்ற பயம் ஏற்பட்டாலன்றி குடலிறக்க அறுவை சிகிச்சைகளை செய்யக் கூடாது. குடலிறக்கத்தினால் நோயாளிக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியத்தின அளவினைக் கருத்திற்கொள்ள வேண்டியது மிக முக்கியமான ஒன்று.

2.அறுவை சிகிச்சை செய்யத் தான் வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்தால், பாதிக்கப்பட்ட பகுதியில் மட்டும மயக்க மருந்தைச் செலுத்திய பிறகு அறுவை செய்தால் அபாயம் மிகவும் குறைவாக இருப்பது வழக்கம். மேலும் அறுவைச் சிகிச்சைக்கு செலவிடும் தொகையும் குறையும். அறுவை முடிந்த அதேநாளில் மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பலாம்.

3.சிறுபிள்ளைகளுக்கு ஏற்படும் அரையைச் சார்ந்த குடலிறக்கத்திற்கு நிச்சயம் அறுவைச் சிகிச்சை செயயப்படவேண்டும் என்பது தற்போதைய முடிவுகளில் ஒன்றாயிருக்கிறது. எனினும் அதிலிருக்கும் சிக்கல்களையும், நன்மைகளையும் பற்றி அறுவை நிபுணரோடு கலத்தாலோசித்து, கிடைத்த தகவல்களுக்கிணங்க சிறந்த சிகிச்சை முறையைத் தீர்மானிக்கலாம். ஆயினும் மிகச் சிக்கலான சூழ்நிலையாக இருந்தால்தான் இதை நடைமுறையில் செயல்படுத்தவேண்டும். □

---

தற்போதைய அரசியல் அமைப்பின்படி

## ஜனாதிபதி தொடர்ந்தும் பதவியிலிருக்க முடியாதென்கிறார் முன்னாள் சபாநாயகர்

(கொழும்பு)

அரசியல் அமைப்பின்படி தேர்தலில் போட்டியிட்டு இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாக பதவியேற்ற ஒருவருக்கு அப்பதவிக் காலத்தை நீடிக்கவோ அல்லது குறைக்கவோ முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் சபாநாயகருமான ஜோசப் மைக்கல் பெரேரா கூறியுள்ளார்.

இதன்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலத்தை நீடிக்கவோ குறைக்கவோ முடியாது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகததில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதி தேர்தல் நடததும் திகதி குறித்த முடிவை எடுக்கும அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கேயுள்ளது எனச் சுட்டிக் காடடிய மைக்கல் பெரேரோ, ஆனால் தேர்தல் நடத்துவதற்குரிய திட்டம் தெளிவில்லாமல் இருக்கின்றது எனறும்,இந்நிலையில் வாக்களிப்பின் போது தேசிய அடையாள அட்டை யை கட்டாயப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சியானது பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

(க-8)

வடமராட்சியில் சேவையில் ஈடுபடும்

## முச்சக்கர வண்டிகளை பதிவுசெய்யக் கோரிக்கை

(துன்னாலை)

வடமராட்சிக்கு உட்பட்ட பிரதேசத்தில சேவையில் உள்ள சகல முச்சக்கர வண்டிகளையும் பதிவு செய்யுமாறு முச்சக்கர வண்டிகள் சங்க நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மைக் காலங்களில் வடமராட்சியில் பல புதிய முச்சக்கர வண்டிகள் பதிவின்றி சேவையில் ஈடுபடுவதாகவும், அவை சில சட்ட விரோத செயல்களுக்குப் பயன்படுத்தப்படுவதாகவும் பொதுமக்கள் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் சகல முச்சக்கர வண்டிகளுக்கும் பதிவு இலக்கங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் இதன் மூலம் சட்டவிரோத செயல்களுக்குப் பயன்படுத்தப்படும் முச்சக்கர வண்டிகளை மக்கள் இலகுவில் இனம் காண முடியுமெனவும் நெல்லியடி முச்சக்கரவண்டிகள் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

(ப-101)

# சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராக மீண்டும் புதுடில்லியில் கருத்தரங்கு

(கொழும்பு)

நோர்வே மற்றும் ஜப்பானின் தீவிர பங்காற்றலுடன் இங்கு சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதை ஜீரணிக்க முடியாத வர்களால் புதுடில்லியில் கடந்த 29,30ஆம் திகதிகளில் கருத்தரங்கொன்று நடாத்தப்பட்டது.

கடந்த அரசாங்கத்தின் ஆட் சிக் காலத்தில் லக்ஷமன் கதிர்காமரால் இவ்வாறான கருத்தரங்குகள் பிர பல்யமான முறையில் ஏற்பாடுசெய்யப்பட்டு நடைபெற்றது. இருந்தும் அது புதுடில்லி ஆட்சிப்பீடத்தின் போக்கில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தாமல் தோல்வியில் முடிவடைந்தது.

இப்போது அமைச் சர் லக்ஷ மன் கதிர்காமர் தற் போதைய அர சாங்க ஆட்சியில் அங்கம் வகிப்பதால் இவ்வாறான தொரு கருத்தரங்கை இங்குள்ள பலவீனமான அரசியல்வாதியைக் கொண்டு ஏற்பாடு செய்து நாடத்தி விட்டார்.

கடந்த மாதம் 27ஆம் திகதி வெளி விவகார அமைச்சின் அனுசரணை யுடன் இலங்கை-இந்திய நட்புறவுச் சங்கம் "இலங்கைத்தீவின் தற் போதைய சமாதான முயற் சிகள்" என்ற தலைப்பில் ஒரு கருத் தரங்கை நடத்தியிருந்தது.

மேற்படி கருத்தரங்கையொட்டிய பிரபலத்தை இந்தக் கருத்தரங்கும் பெறும் என்ற நோக்கிலேயே இந்தச் சமாதான எதிர்ப்புக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்ட போதும், அது எந்தவித பிரபலத்தையும் பெற வில்லை.

அத்தோடு தனது வழ மையான நடவடிக்கைகளில் ஒன் றாக இலங்கைத் தீவிற்கு விஜயம் செய்யும் இந்திய இராணுவத் தள பதியின் விஜயத்தை பிரபலப்படுத்துவதையும் நோக்காகக்கொண்டே இது ஏற்பாடு செய்யப்பட்டதாகவே கருதப் படுகிறது.

இலங்கையில் இரு தசாப்த காலமாக இடம்பெற்றுவரும் இனப்பிரச்சினைக்கான தீர்வை தற்போதைய சமாதான முயற்சி எட்டுவதற்கான ஆதரவை இந்தியா பூரணமாக வழங்குகிறது என்பது ஏற்கனவே இதில் சம்பந்தப்பட்ட நாடுகளிற்கு இந்தியாவில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு இந்தியா இந்த சமாதான முயற்சியில் நேரடியாகப் பங்கு பற்றமாட்டாது என்பதும் தெரியப்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே மேற்படி கருத்தரங்கு அங்கு நடத்தப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த மூத்த இராஜதந்திரியொருவர், யாரும் எந்தக் கருத்தரங்கையும் நடத்தலாம். இதற்கான ஜனநாயக உரிமை அவர்களுக்கு உண்டு. ஆனால் இந்திய அரசோ, வெளி விவகாரத் திணைக்களமோ வெளியிடும் கருத்துக்கள் உத்தியோக பூர்வமானவை என்பதை அனைவரும கவனத்தில் கொள்ள வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

இக கருத்தரங்கில் உத்தியோக பூர்வமாக எவருமே இந்திய அரச சார்பாகக் கலந்து கொள்ளவில்லை என்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட மேற்படி இராஜதந்திரி, இதில இலங்கையின் தற்போதைய அமைச்சர் பதவியில் உள்ள டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ள சந்திரிகா எவ்வாறு அனுமதித்தார் என்பது தெரியவில்லை எனவும், தேவானந்தாவின் பங்குபற்றலை தனிப்பட்டதாக எடுத்துக்கொள்ள முடியாதுள்ளது என்றும் தெரிவித்தார்.

அததுடன், குறிப்பாக இந்தியத் திணைக்களங்களில் பணியாற்றி, ஓய்வு பெற்ற ஒரு சில அதிகாரிகள் மற்றும் சமாதானத்திற்கெதிரான கருத்துடைய தனிப்பட்டவர்களே இம் மாநாட்டில் பங்குபற்றியிருந் தனர்.

இவ்வாறானவர்கள் கருத்தரங்குகளில் பங்குபற்றுவதற்காக வழங்கப்படும் கொடுப்பனவு மற்றும் சலுகைகளிற்காக இவ்வாறு பங்குபற்றுவது வழமையே. இதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை என்றும் அவா மேலும் குறிப்பிட்டார்.

(ரு-121)

# பொலித்தீனைக் கட்டுப்படுத்துங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொலித்தீன் பாவனை முன்னைய காலங்களிலும் பார்க்க தற்போது அதிகரித்துக் காணப்படுவதாக சுற்றுச் சூழல் பாதுகாப்பாளர்கள் மிகவும் கவலை தெரிவித்து வருகின்றனர்.

பொலித்தீன் பாவனையை முற்று முழுதாகக் கட்டுப்படுத்தும்படி பல்வேறு தரப்பினராலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருந்தபோதிலும் கூட பொது மக்கள் இது விடயத்தில் எத்தகைய அக்கறையும் எடுக்காமல் இருந்து வருகின்றனர்.

பொலித்தீன் பாவனை என்பது இப்போது குடாநாட்டில் வாழ்பவர்கள மத்தியில் மிகவும் இன்றியமையாத ஒன்றாக அமைந்துவிட்டது.

இவ்வேளையில் ,யாழ்ப்பாண மாவட்டத்தில உள்ள சில உள்ளூராட்சி மன்றங்கள் தமது அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் பொலித்தீன் பாவனையை முற்றுமுழுதாகக் கட்டுப்படுத்தும்படி வேண்டுகோள்களை விடுத்துள்ள போதும் அது முழுமையாகப் பயனளிக்க வில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

(ப-16)

# கொட்டப்படும் கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கிற்கு அருகாமையில் உள்ள தந்தை செல்வா சதுக்கத்தின் கரையோரங்களில் கழிவுப்பொருட்கள் தொடர்ந்தும் கொட்டப்பட்டுள்ளன.





இதனால், அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன், தற்போதைய மழை காலத்தில் சுகாதாரச்சீர்கேடுகள் நிலவுவதுடன் தொற்றுநோய்கள் பரவும் அபாயமும் தோன்றியுள்ளது.

தந்தை செல்வா சதுக்கத்தின் கரையோரங்களில் இறைச்சிக்காக வெட்டப்படும் விலங்குக் கழிவுகள் மற்றும் இறந்த உயிரினங்கள் உட்படப் பல்வேறு கழிவுப்பொருட்கள் கொட்டப்பட்டுள்ளதைக் காணக்கூடிய தாக உள்ளது.

இதனால், அப்பகுதியில் தொடர்ந்து சில நாட்களாகத் துர்நாற்றம் வீசிவருகின்றது. இதனால் அதன் அருகாமையில் உள்ள வீதி ஊடாகப் பொதுமக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாமல் உள்ளதுடன்,சுகாதாரச்சீர்கேடும் அப்பகுதியில் நிலவுகிறது.

அத்துடன், அப்பகுதிக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கும் இவற்றால் பெரும்பிரச்சினை தோன்றியுள்ளது.

தந்தை செல்வா சதுக்கத்தின் கரையோரங்களில் விஷமிகள் இவ்வாறு கழிவுகளைக்கொட்டுவது தடுத்து நிறுத்தப்படவேண்டும். இது குறித்து சம்பந்தப்பட்டோர் விரைவில் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அவசியம்.

(ரு-19)

# அமெரிக்க குடியுரிமையை பெறுவதற்காக தங்கையை மணம்முடித்தார் அண்ணன்

(வாஷிங்டன்)

அமெரிக்கக் குடியுரிமையை தனது தம்பிக்கும், தங்கைக்கும் விரைவாக பெறவேண்டும் என்பதற்காகத் தங்கையைப் போலியாகத் திருமணம் செய்து கொண்டு தம்பியை தன் மனைவிக்கே திருமணம் செய்து கொடுத்துள்ளார்.

ஒரு இந்தியரின் இந்த மோசடியை அமெரிக்க அதிகாரிகள் கண்டுபிடித்தனர். அவர்கள் மீது சதிக் குற்ற மோசடி விஸா அனுமதியைத் தவறாகப் பயன்படுத்தியமை எனப் பல வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்தியாவைச் சேர்ந்தவர் பரம் ஜீத் சிங் தக்கர் (வயது-44) அவரது மனைவி ஹர்பன்ஸ் கௌர்கோதி (வயது-51) இவர்களுக்கு 1983 இல் திருமணம் நடந்தது. அவர்கள் இருவரும் பல ஆண்டுகளாக அமெரிக்காவில் வசித்து வருவதால், அமெரிக்கக் குடியுரிமை பெற்றுள்ளனர். இருவரும் 1994 இல் விவாகரத்துப் பெற்றுக்கொண்டனர். ஆனாலும் ஒரே வீட்டில் கணவன்- மனைவியாகத் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

பரம் ஜித்சிங் தன் தம்பி குர்ரீப் சிங் அத்வால் (வயது-43), தங்கை பிரிதம் கௌர் (வயது-35) ஆகியோருக்கும் விரைவாக அமெரிக்கக் குடியுரிமையைப் பெறத் திட்டமிட்டார்.

ஆனால், அமெரிக்கக் குடியுரிமை பெற்ற ஒருவரின் மனைவி அல்லது கணவன் என்றால் எவ்வித காத்திருப்புக் காலமும் இல்லாமல் உடனடியாகக் குடியுரிமை வழங்க அமெரிக்கச் சட்டத்தில் இடமுள்ளது. சகோதரன் அல்லது சகோதரியாக இருந்தால், 13 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

எனவே, இருவருக்கும் அமெரிக்கக் குடியுரிமை பெற பரம்ஜித் சிங் ஒரு மோசடித் திட்டத்தைத் தீட்டினார்.

தன் மனைவிக்கு தன் தம்பியை திருமணம் செய்து வைப்பதன் மூலமும், தன் தங்கையைத் தானே திருமணம் செய்வதன் மூலமும் உடனடியாக இருவருக்கும் அமெரிக்கக் குடியுரிமை பெறத் திட்டமிட்டார். அதன் படி, போலியாகத் தன் தங்கை பிரீதம் கௌரை அவர் திருமணம் செய்துகொண்டார்.

அவரது தம்பி குர்தீப் சிங்கை அவரது மனைவி ஹர்பன்ஸ் கௌர் திருமணம் செய்துகொண்டார்.

இந்த மோசடியை அமெரிக்க அதிகாரிகள் கண்டுபிடித்தனர். அந்த மோசடித் திருமணத்தை செய்வதற்காகவே பரம்ஜீத் சிங்கும், ஹர்பன்ஸ் கௌரும் விவாகரத்து செய்து கொண்டனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவர்கள்மீது மோசடி, சதிச் செயல உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் பேரில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

(ரு)


# பருத்தித்துறைப் பிரதேசசபை புலோலி

## சந்தைகள் இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல்-2005

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :-2004.11.18 நண்பகல் 12.00 மணிவரை
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2004.11.19 முற்பகல் 11.30 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி :-2004.11.19 நண்பகல் 12.00 மணி
04. கேள்வித்தொகை கேள்விப்பத்திரப்பணம் ஆகியவற்றுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 15 % சேர்த்து அறவிடப்படும்
05. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.
06. கேள்விப்படிவங்களின் ஒரு பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைப்பதுடன் மறு பிரதியினை இந்த அலுவலகத்திற்கு நேரிலோ அன்றேல் பதிவுத்தபாலிலோ சேர்ப்பித்தல் வேண்டும்.

# கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01.மந்திகை மாட்டிறைச்சிக்கடை | 81900.00 | 5000.00 | 360.00 |
| 02.மானாண்டி மாட்டிறைச்சிக்கடை | 69200.00 | 3000.00 | 360.00 |
| 03.மந்திகை ஆட்டிறைச்சிக்கடை | 81300.00 | 1500.00 | 360.00 |
| 04.அல்வாய் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 18700.00 | 1500.00 | 360.00 |
| 05.மந்திகை சந்தை | 110000.00 | 1500.00 | 360.00 |
| 06.மானாண்டிச் சந்தை | 85900.00 | 1500.00 | 360.00 |
| 07.பொற்பதி மீன் சந்தை | 50700.00 | 1500.00 | 360.00 |
| 08.மணற்காடு மீன்சந்தை | 15200.00 | 1500.00 | 360.00 |
| 09.கற்கோவளம் சந்தை | 4800.00 | 500.00 | 180.00 |
| 10.மருதங்கேணிச் சந்தை | 2000.00 | 500.00 | 180.00 |
| 11.கெருடாவில் சந்தை | 1100.00 | 500.00 | 180.00 |

29.10.2004

திரு.சிதம்பரப்பிள்ளை பசுபதி
செயலாளர்,
பருத்தித்துறை பிரதேசசபை,
புலோலி.

(C/667)

## இன்று ஒரு தகவல்

# நட்பு

ஆழம் தெரியாமல் காலை விடுவதும் தவறு. ஆராயாமல் நட்பு செய்வதும் தவறு. நட்பு என்றால் ஏதோ திடீர் என்று வந்துவிடும் ஒன்றல்ல. இந்தக் காலத்தில் அப்படி திடீரென்று நட்பு ஏற்படுவதைப் பார்க்கலாம். அது நட்பு இல்லை நாடகம். தனியாக இருக்கும்போது ஒருவனையொருவன் திட்டிக் கொண்டேயிருப்பான். நேரில் கண்டு விட்டால்... நெடு நாளாகத் தவித்துக் கொண்டிருந்தவன் மாதிரி ஓடிப்போய் கட்டிப்பிடித்துக் கொள்வான். பிசிராந்தையரும் கோப்பெருஞ்சோழனும் மீண்டும் பிறந்து வந்திருக்கிறோம் என்று இரண்டுபேரும் சொல்வார்கள். ஆனால் ஒருவனது காலை இன்னொருவன் எப்படி வாரிவிடலாம் என்று யோசித்துக் கொண்டிருப்பான்.

ஆராயாமல் நட்பு செய்வதைவிட கெடுதி எதுவும் இலலை என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். அது எந்தளவிற்கு உண்மை என்பது அனுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் தெரியும். ஒரு காட்டில்ஒரு ஓநாயும் நரியும் இருந்தன. அவற்றிற்குச் சாப்பிட ஒன்றும் கிடைக்கவில்லை. நீண்ட நாட்கள் பட்டினி. இப்படியே எத்தனை நாளைக்கு இருக்க முடியும்? இரண்டும் கூடி யோசனை செய்தன.

உழுதுண்டு வாழ்வதை விட தொழுதுண்டு வாழ்வது சுலபமாக இருக்கும்போல் தோன்றியது. அந்த நேரத்தில் ஒரு புலி அந்தப் பக்கம் வந்தது. ஓநாயும் நரியும உடனடியாக ஒரு முடிவுக்கு வந்தன. அதாவது... அந்த புலியை மெதுவாக சிநேகிதம்பிடித்துக் கொண்டால் என்ன? அதுபோல ஒரு பலசாலி நண்பனாக இருந்தால் எல்லாம் சுலபமாக நடக்கும்.

இவையிரண்டும் போய் அந்தப் புலியிடம் சொல்லியது. நாம் மூன்று பேரும் ஒரு தாய் மக்களாக இருப்போம். சகோதரபாசத்துடன் வாழ்வோம். எந்தஇரை கிடைத்தாலும் அதை மூன்று பேரும் பங்கு போட்டு உண்போம் என்ன சொல்கிறாய்? என்றன. புலியும் சரி சொல்லியது. அவ்வளவுதான். திடீரென்று மூன்றும் ஒன்றையொன்று கட்டிப்பிடித்துக் கொண்டன.

ஏதாவது இரைகிடைக்குமா என மூன்றும் தேடிக் கொண்டு போயின. ஒரு மான்குட்டி கண்ணில் பட்டது. மூனறும் அதை அடித்தது. இரை கிடைத்துவிட்டது. இனிமேல் பங்கு போடவேண்டும். ஓநாய்க்குப் பசி தாங்கவில்லை. வாயை இறுகமூடிக் கொண்டிருந்தது. புலி அதைப் பார்த்து 'ஓநாயே! இந்த மானை நம் மூன்று பேருக்கும் பங்கு பிரித்துக் கொடு' என்றது. 'சா!' என்று ஓநாய் சொல்லியது. அது 'புலியாரே நீங்கள்தான் எங்களுக்குத் தலைவன்! எஜமான்! அதனால் இந்த மானின் தலை உங்களுக்கு. இந்த நரி வேகமாக ஓடக்கூடியது. அதனால் மானின் கால் இந்த நரிக்கு. மீதியுள்ள உடம்மை நான் எடுத்துக் கொள்கிறேன்' என்றது.

ஓநாய் இதைச் சொல்லி வாய் மூடவில்லை அதற்குள் புலி அதன் தலையில் ஓங்கி அடித்துவிட்டது. தாங்க முடியாதவலி.ஓநாய் ஊளையிட்டுக் கொண்டே கீழே உருண்டது. ஏற்கனவே பசிவேறு என்ன செய்யும்?

புலி நரியிடம் திரும்பி 'நீ பங்ககுபோட்டுக் கொடு' என்றது. நரியும் சரி என்று கூறிவிட்டு எழுந்துநின்றது. 'புலியாரே! இந்த மானின் தலை உங்களுக்குத் தான் சேர வேண்டும். ஏனென்றால் நீங்கள் தான் எங்கள் தலைவர். மானின் உடலும் உங்களுக்குத்தான். ஏனென்றால் எங்களை ஒரு தந்தையைப் போல் காப பாற்றப் போவது நீங்கள் தான். மானின் காலும் உங களுக்குத்தான் ஏனென்றால் எந்த நேரமும் எங்களுக்காக அலைந்து பாடுபடப்போவது நீங்கள் தான்'என்றது.

புலிக்கு சந்தோஷம் தாங்கவில்லை. நரியே உனக்குத்தான் அறிவு அதிகம். தமக்குக் கிடைந்த இந்த இரையை... பாகுபாடில்லாமல் இவ்வளவு பக்குவமாக பங்குபோட நீ எங்கு பாடம் கற்றுக் கொண்டாய்?' என்று கேட்டது. நரி கூறியது 'எஜமானே! வேறு எங்கும் கற்றுக்கொள்ளவில்லை. கொஞ்ச நேரத்திற்கு முன்பு நீங்கள் ஓநாய்க்குப் பாடம் கற்பித்தீர்கள். அதைப் பார்த்துவிட்டுத்தான் நான் கற்றுக் கொண்டேன். நான் இவ்வளவு புத்திசாலியாக ஆனதற்கு நீங்கள் தான் காரணம். அந்தப் பெருமையும் உங்களுக்குத்தான்' ஆராயாமல் நட்பு வைத்துக் கொண்டால் இப்படித்தான் பேச வேண்டியிருக்கும் வேறு என்ன செய்வது?

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# கொலைச் சம்பவங்களைக் கண்டித்து கொழும்பில் படுகொலை எதிர்ப்பு நிகழ்வு

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்றுவரும் படுகொலைகள் உடன் நிறுத்தப்படல் வேண்டும் எனக் கூறி கடந்தவாரம் மேற்கொள்ளப்பட்ட படுகொலை எதிர்ப்பு நிகழ்வில் ஜே.வி.பி, ஹெல உறுமய என்பவற்றுடன் கருணா அணியினரும் இணைந்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடநத வெள்ளிக்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மேற்படி நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந் நிகழ்வில் அரசியல் கட்சிப் பிரமுகர்களும் சமூக அமைப்புப பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். ஜே.வி. பி., ஹெல உறுமய, ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர். எல்.எவ், தேசிய ஐக்கிய முன்னணி, மகாஜன எக்சத் பெரமுன மற்றும் கருணா அணி என்பனவும் பல சமய அமைப்புகளும் இதில் கலந்து கொண்டன.

இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பாளராக கருணா அணியைச் சேர்ந்த ரி.ராஜரட்ணம் செயற்பட்டார்.

இவர் அந்நிகழ்வில் உரையாற்றுகையில்,

சர்வதேச ரீதியிலேயே கொலையாளிகளாக அறிவிக்கபபட்ட விடுதலைப் புலிகள் பயணம் செய்வதற்காக ஹெலி வசதிகளை வழங்கியது முறையற்றது என அரசாங்கத்தை குற்றஞ்சாட்டினார்.

இந் நிகழ்வில் அறிக்கை ஒன்றை விடுத்த கருணா அணியினர், இக் கொலைகளை முடிவுக்குக் கொண்டுவர அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என வேணடிக் கொண்டதாகத் தெரியவருகிறது. (ற-6)

# குற்றச்செயல்களைத் தடுக்க உதவும் மக்களுக்கு பொலிஸார் பூரண பாதுகாப்பை வழங்குவர்


## கோப்பாய் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி செல்வம் உறுதி

குற்றச்செயல்களை தடுக்க நாங்கள் மக்களுக்கு பாதுகாப்புக் கொடுப்போம். இதனை ஏற்று எங்களுக்கு பின்னால மக்கள் அணிதிரண்டு நிற்கவேண்டும் என கோப்பாய் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் தெரிவித்துள்ளார்.

கோண்டாவில் வடக்கு சிவபூதவராயர் தேவஸ்தானத்தில் கலைவாணி சனசமூக நிலையத்தினரின் ஏற்பாட்டில் உருவாக்கப்பட்டுள்ள விழிப்புக்குழுவினருடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுவாக குற்றச் செயல்கள் புரிவோர் மீது முறைப்பாடு செய்தால் நாம் கட்டாயம் நடவடிக்கை எடுப்போம்.

சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்காக பொறுப்புணர்வோடு செயற்படுவதற்காகவே நாம் மக்களின் காவலர்கள் என்ற பதவியில் உள்ளோம்.



கோவில்கள் கள்வருக்கு சாதகமான முறையில் அமைக்கப்பட்டுள்ளதால்தான் கோவில்களில் களவு போவதற்கு கூடுதல் சாத்தியம் காணப்படுகிறது.

வடுகளில் இடம்பெறும் களவுகளைத் தடுக்க வீட்டிற்கும் தெருவிற்கும் மக்கள் மின் விளக்குகளைப் பொருத்த வேண்டும்.

பொதுமக்கள் முறைப்பாடு செய்தால் நாங்கள் அதற்கான நடவடிக்கையை எடுப்போம் சில இடங்களில் பொலிஸார் மேற்கொண்ட குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக குற்றச் செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

குற்றச்செயல்களை பொலிஸாருடன் இணைந்து தடுக்க முன்வருவோருக்கு உரிய பாதுகாப்பு நாங்கள் கொடுப்போம். குற்றச்செயல்களைத் தடுக்க எங்களுக்குப் பின்னால் மக்களும் அணிதிரள வேண்டும். அப்போதுதான் அசம்பாவிதங்களைத் தடுக்கலாம்.

மக்களினுடைய குறைபாடுகளைத் தீர்க்க இருபத்திநான்கு மணி நேரமும் பொலிஸ்நிலையக் கதவுகள் திறந்திருக்கும். எந்தநேரமும் மக்கள் பொலிஸ் சேவையின் பயனைப்பெறலாம்.

சில கிராமங்களில் சனசமூக நிலையங்கள் பொலிஸாருடன் இணைந்து எடுத்த நடவடிக்கையினால் கசிப்பு உற்பத்தி இல்லாமல் ஒழிக்கப்பட்டுள்ளது. அதைப்போல எல்லா சனசமூக நிலையங்களும் செயற்படவேண்டும்.

பொதுமக்கள் விழித்திருக்கும் நேரங்களில் கள்வர் உறங்கி விடுகிறார்கள். கள்வர் விழித்திருக்கின்ற நேரத்தில் பொது மக்கள் உறங்கிவிடுகிறார்கள். இதனைக் கவனத்தில் கொண்டு பொலிஸார் எந்நேரமும் விழிப்புடன் செயற்படுகின்றனர் என்றார். (ப-74)

# இராசிபலன்

**02.11.2004**

**(ஐப்பசி 18, செவ்வாய்க்கிழமை).**

**பஞ்சமி பிற்பகல் 04.18 மணிவரை**

**திருவாதிரை மரண மு.இ. 11.56 மணிவரை**

**இராகுகாலம் 03.04- 04.34 மணிவரை**

**சுபநேரம் 10.34 - 12.04 மணிவரை**

**கௌரிவிரதம் 11 ஆம் நாள்**

**மேடம்** *இனிய அனுபவம், அந்நியர் சந்திப்பு, வாக்குமேன்மை, புதிய பொருள்சேர்க்கை*

**இடபம்** *கௌரவக்குறைவு, எடுத்த கருமங்கள் தாமதமாகும், மாதர்நட்பு, கோபப்படுதல்.*

**மிதுனம்** *நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், பெரியோர் சந்திப்பு.*

**கடகம்** *பிதா சிந்தை, காரிய இடையூறு, பிரயாணம், குறைந்த வருமானம்.*

**சிங்கம்** *நல்ல காரியம், களஸ்திர நன்மை, பெருமையடைதல், நல்ல செய்தி.*

**கன்னி** *சுப நிகழ்ச்சி, தொழிலில் ஆர்வம், நண்பர்கள் உதவி, பணவருவாய்.*

**துலாம்** *ஆன்றோர் மதிப்பு, அச்சமான நிலை, உடல்நலக்குறைவு, கட்டுப்பாடு.*

**விருச்சிகம்** *ஆரோக்கியக் குறைவு, வீண் தொல்லை, காரியதடங்கல், வாகன பயம்.*

**தனுசு** *அபூர்வ சந்திப்பு, நல்ல வருமானம், திடீர் பயணம், பெருமையடைதல்.*

**மகரம்** *சுகவாழ்வு, தடைப்பட்ட காரியம் கைகூடும், தொழில்நன்மை, பணவருவாய்.*

**கும்பம்** *முயற்சி தாமதம், பதற்றநிலை, ஆரோக்கியக்குறைவு, தனவிரயம்.*

**மீனம்** *வீண் சம்பாசனை, அதிக முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, தனவிரயம்.*

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

— வள்ளுவன்

# கடத்தப்பட்ட தமிழரை விடுவிக்க தீவிர முயற்சி

(கொழும்பு)

ஈராக்கில் தீவிரவாதிகளினால் கடத்தப்பட்ட இலங்கையரான தினேஸ் தர்மேந்திரா இராஜரத்தினத்தை விடுவிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டு வருவதாக பிரதி அமைச்சர் பேராசிரியர் விஸ்வவர்ணபால தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட நபர் தனது சுயவிருப்பத்தின் பேரில் குவைத்திலிருந்து ஈராக்கிற்கு அனுப்பப்பட்டாரா? அல்லது தொழில் நிறுவனத்தின் கட்டாயத்தின் பேரில் அனுப்பிவைக்கப்பட்டாரா? என்பன குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகின்றன.

இவரை இராஜதந்திர ாதியிலோ அல்லது மாற்று வழிகளிலோ விடுவிப்பதற்கான முயற்சிகளில் மத்திய கிழக்கிலுள்ள ஏனைய இலங்கை இராஜதந்திரிகள் ஊடாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# வெளிநாடு சென்ற அரச ஊழியர்கள் மீண்டும் வேலைவாய்ப்பைப் பெறுவர்

(கொழும்பு)

வன்செயல்கள் இடம்பெற்றபோது நாட்டைவிட்டு வெளியேறிய அரசாங்க உத்தியோகத்தர்களை மீண்டும் கடமையில் அமர்த்துவது குறித்து பொதுநிர்வாக அமைச்சு கவனம் செலுத்திவருகின்றது.

வெளிநாடுகளில் தங்கிவிட்டு தற்போது மீண்டும் நாடு திரும்பிய அரசாங்க உத்தியோகத்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பொதுநிர்வாக அமைச்சு அவர்களை மீண்டும் அரச சேவையில் இணைத்துக் கொள்ளவுள்ளது என அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறானவர்களின் சேவைக் காலத்தைத் கணிப்பிட்டு ஓய்வுபெறவுள்ளவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர். - குறள்

வலம்புரி

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவருமா?

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் கருத்து முரண்பாடுகள் வெடிக்கத் தொடங்கிவிட்டது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் ஒன்றையொன்று கடிபட ஆரம்பித்துவிட்டன.

இதனால் எந்நேரமும் ஆட்சிக்கு ஆபத்து நேரலாம். மீண்டும் ஒரு தேர்தலை நாடு சந்திக்கவேண்டி வரலாம் என்ற ஏக்கத்தில் நாட்டு மக்கள் குழம்பிப் போயுள்ளனர்.

முதிர்வு காலத்திற்கு முன்னரே ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைத்து தேர்தலை நடத்தியதன் விளைவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க காலங்கடந்தேனும் உணர்ந்திருப்பார் என நம்பலாம்.

பாராளுமன்றத்தில் இன்னமும் தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்காமல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு காலங்கடத்துகின்றது. எனினும் அரசின் பலத்தை நிரூபிக்குமாறு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எந்தக் கோரிக்கையையும் இதுவரை முன்வைக்கவில்லை.

இதற்குள் இருக்கக்கூடிய காரணம் இரண்டு. அதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கும் கோரிக்கையை முன்வைத்தால் தனது தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களை அரசு விலைகொடுத்து வாங்கிவிடும் என்ற பயம் ஒன்று.

மற்றையது தனது கோரிக்கை இலங்கைத் தமிழ் மக்களுக்கு சாதகமாகிவிடும் என்ற ஏக்கம். அதாவது, அரசின் பலத்தை நிரூபிக்குமாறு தான் கோரிக்கை முன்வைத்ததால் அரசு தளம்பல் அடைவது சர்வ நிச்சயம்.

இதனால், தென்னிலங்கை அரசியலில் ஏற்படுகின்ற குழப்பம் தமிழர் தரப்பிற்கு சாதகமாகிவிடும் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் கணிப்பு. மேற்கூறப்பட்ட இரண்டு நிலைகளிலேயே அரசின் பெரும்பான்மைப் பலத்தை நிரூபித்துக் காட்டுமாறு ஐக்கிய தேசியக் கட்சி கோரவில்லை.

மேற்தரப்பட்ட முடிபு உறுதியானதா? அல்லது ஆய்வு செய்யப்பட்டதா என்ற கேள்வி அரசியல் விருப்புடையவர்களிடம் ஏற்படுவது நியாயமானதே. எந்தவொரு விடயத்தையும் ஆய்வின்றி, ஆதாரமின்றி கூறுவது பத்திரிகைத் தர்மமன்று. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை அதன் நிலைப்பாட்டிற்கு மேற்தரப்பட்டவையே காரணம் என்பதை அந்தக் கட்சியின் நடவடிக்கையிலிருந்து துணிய முடியும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைப்பதற்கு முன்னதாக, பாதுகாப்பு மற்றும் நிதியமைச்சை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்தார்.

இவ்வாறு பாதுகாப்பு மற்றும் நிதியமைச்சை ஜனாதிபதி தனக்குள் கொண்டுவந்ததும், துள்ளிக் குதித்த ஆளும்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணி, ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தை எதிர்ப்பதென முடிவுசெய்தது.

இந்த முடிவு அப்போது அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் கொண்ட ஐக்கிய தேசிய முன்னணி அரசு, ஜனாதிபதியால் முன்வைக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தில் அவரினால் பறிக்கப்பட்ட அமைச்சிற்கான நிதி ஒதுக்கீட்டிற்கு ஆதரவு வழங்காவிடில் அது பெரும் குழப்பத்தை தருமென எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் பாதுகாப்பு அமைச்சிற்கான நிதி ஒதுக்கீட்டின்போது ஐக்கிய தேசிய முன்னணி அரசு பூரண ஆதரவை வழங்கியது. இதேபோன்று தற்போதைய அரசில் இடம்பெற்ற உப சபாநாயகர் தெரிவிலும் அதே கட்சி அரசிற்கு சாதகமாகச் செயற்பட்டது.

ஆக, ஆட்சியைக் கைப்பற்றும் சூழ்நிலை இருந்தபோதிலும் அதனைச் செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் முன்வரப்போவதில்லை.

ஏனெனில் தனது முடிபு ஈழத் தமிழர்களுக்குச் சாதகமாகிவிடுமா? என்ற பயத்தின் அடிப்படையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து முடிபுகளும் எடுக்கப்படுகின்றன.

## வட-கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும்

# சித்திர பாட ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்ப ஜனவரியில் 51 பேர் புதிதாக நியமிக்கப்படுவர்

## கல்வி அமைச்சின் சித்திர பாடப் பணிப்பாளர் உறுதி மொழி

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் சித்திர பாட ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு ஐந்து ஆசிரியர்கள் போதுமானது என வடக்குக் - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரிகள் தெரிவித்திருந்தபோதும், இங்கு வந்து பார்த்த பின்பே நிலைமை விளங்குகிறது.

இங்கு வந்து பார்த்தபோது 400 சித்திரபாட ஆசிரியர்களின் தேவை இங்கு உள்ளமை எம்மால் அவதானிக்க முடிந்தது. உண்மைநிலை இவ்வாறிருக்க அவ் அதிகாரிகளின் பதில் எங்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் கல்வி உயர் கல்வி அமைச்சின் சித்திர பாடப் பணிப்பாளர் துஷார குணதிலக.

யாழ்.மாவட்டத்தில் இவ் வருடம் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள சித்திர பாட மாணவர்களுக்கான செயலமர்வு ஒன்று இவ் அதிகாரி தலைமையிலான குழுவினரால் யாழ்.மத்திய கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடாத்தப்பட்டது. அதில் கருத்துத் தெரிவிக்கையிலேயே துஷார குணதிலக இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

வடக்கு - கிழக்கு மற்றும் தென்பகுதியைச் சேர்ந்த 50 ஆசிரியர்கள் சுமார் ஆயிரத்து 800 மாணவர்களுக்கு பயிற்சி அளித்துள்ளனர். இம்முறை சித்திர பாடத்தில் 75 சதவீதத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் சித்தியடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேபோன்று, வவுனியா மாவட்டத்திலும் செயலமர்வு ஒன்று எம்மால் நடாத்தப்பட்டது. அடுத்த வார இறுதிக்குள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் இப் பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்தவுள்ளோம்.

கடந்த ஆண்டுகளில் சித்திர பாடப் பரீட்சைகளில் சிங்கள மொழியிலிருந்து தமிழ்மொழிக்கு மொழிபெயர்ப்புச் செயவதில் பிரச்சினைகள் ஏற்பட்டதால் சில வினாக்களுக்கு மாணவர்கள் விடையளிக்க முடியவில்லை. அந்தத் தவறை நீக்கும்முகமாக குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இக் குழு எதிர்வரும் 2005 ஆம் ஆண்டு முதல் செயற்படும்.

சித்திர பாடப் பரீட்சைகள் கூடுதலாக இலங்கையின் வரலாற்று அரசியலை அடிப்படையாக வைத்துத்தான் தயாரிக்கப்படுகின்றன. தமிழைப் பொறுத்தவரை பொலநறுவை வரலாறு மட்டும்தான் தமிழர்களின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்றது. ஆனால் க.பொ.த.(உ.த) பரீட்சைகளில் இப்பிரச்சினைகள் இல்லை. காரணம் இலங்கை, இந்தியா ஐரோப்பா போன்ற நாடுகளின் கலாசார விழுமியங்கள் பாடப் பரப்பினுள் சேர்க்கப்பட்டுள்ளன.

மேலும், கல்வி அமைச்சினால் சித்திரபாட மாண்வர்களுக்கென இலவச பாடநூல்கள் உருவாக்கப்ப[illegible]வுள்ளன. சித்திர பாட ஆசிரியர்களை நியமிக்க உத்தேசிக[illegible]ப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ஜனவரி முதல் 51 ஆசிரியர்கள் நியமனம் செய்[illegible]டவுள்ளனர். பல்கலைக்கழகத்தில் சித்திரத்தை ஒ[illegible] பாட[illegible]ாக எடுத்தவர்களை இவ் வெற்றிடங்களில் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இம் மாதத்தில் இதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் வெளிவரும்.

மிகவும் சிரமப்பட்டுத்தான் இச் செயலமர்வு நடாத்தப்பட்டது. கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாராடிமெல் இச் செயலமர்வு ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளுக்கு மிகவும் ஒத்துழைப்பு வழங்கினார் என அவர் தெரிவித்தார். இந்நிகழ்வில் சித்திரபாட ஆசிரிய ஆலோசகர் ஞா.தயாளனும் கலந்துகொண்டார்.

இச் செயலமர்வு கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இச் செயலமர்வின்போது கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் யாவும் மாணவர்களுக்கு கல்வி அமைச்சினால் இலவசமாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரு-5)

# பிரான்ஸ் நாட்டு அதிகாரி யாழ்ப்பாணம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டின் இன்றைய நிலைப்பாடுகள் குறித்தும், மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பாகவும் தகவல்களைத்திரட்டி ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பிப்பதற்காக பிரான்ஸைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

பிரான்ஸில் [illegible]ள்ள ஹரித்தாஸ் நிறுவனத்தின் ஆசியப் பிராந்தியம் மற்[illegible] மத்திய கிழக்கு நாடுகளுக்கான தலைவரான ஆலோசி[illegible] ஜோன் என்பவரே இங்கு வந்தவராவார். யாழ்ப்பாணத்திலுள்ள கியூடெக் நிறுவனத்தின் பணிப்பாளர் வணபிதா சீ.ஜீ.ஜெயக்குமார் அடிகளுடன் இவர் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

ஹரித்தாஸ் நிறுவனத்தின் தலைவர் யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளுடன் சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டு யாழ்.குடாநாட்டு மக்களின் வாழ்வியல் தொடர்பான பிரச்சினைகள் குறித்தும், அதியுயர் பாதுகாப்பு வலயம், மீனவர்கள், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராய்ந்திருந்தார்.

யாழ்.குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் மட்டத்துக்கு தனது அறிக்கை விரைவி[illegible] சமர்ப்பிக்கப்படும் என்று ஹரித்தாஸ் தலைவர் தெரிவித்தார். (ப-16)

# கட்சி பிளவுபடக்காரணம் என்ன என்பதை ஹக்கீமே கண்டறியவேண்டும்

## அமைச்சர் பேரியல் அஷ்ரப் தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏன் இன்னொரு கட்சிக்கு தாவுகின்றார்கள் என்பதற்கான காரணத்தை கட்சித்தலைவர் ரவூப் ஹக்கீமே கண்டறிய வேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியும் அமைச்சருமான பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து இது குறித்து தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் வேறோர் கட்சிக்கு மாறுவதற்கு காரணம் என்ன என்பதை கண்டறியாத ஹக்கீம், குறிப்பிட்ட சில கட்சிகள் மீது குற்றச்சாட்டுக்களை அடுக்குவது தறவானதாகும்.

கட்சியில் உள்ளவர்கள் மாற்றுக் கட்சிகளுக்குத் தாவ அரசாங்கமே காரணம் என்றும், அரசின் இந்தச் சதி நடவடிக்கையை தாம் கண்டிப்பதாகவும் ஹக்கீம் கூறிவருகின்றார். இவரது இத்தகைய கூற்று தவறானதாகும்.

அரசாங்கம் ஏன் முஸ்லிம் காங்கிரஸைப் பிரிக்கவேண்டும்? அவ்வாறு அரசுக்கு பிரிக்கவேண்டிய தேவையும் இல்லை.

எனவே, ஹக்கீம் பிறர் மீது குற்றச்சாட்டுக்களை அடுக்குவதைவிடுத்து கட்சி பிளவுபடுவதற்கான காரணத்தைக் கண்டறியவேண்டும்.

எது எவ்வாறாயினும் சகல முஸ்லிம்குழுக்களும் ஒன்றிணைந்து முஸ்லிம்களின் உரிமைக்காகப் போராடவேண்டும் என்றார். (க)

# இந்துக்கள் அதிருப்தி

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள இந்து ஆலயங்களில் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டுவரும் திருட்டுச் சம்பவங்கள் குறித்து இந்து சமய ஆர்வலர்களும், இந்து சமய நிறுவனங்களும் மிகவும் அதிருப்தி அடைந்து வருகின்றன.

இத்தகைய ஆலயங்களில் காலங்காலமாக பேணிக் காக்கப்பட்டு வரும் இந்துக் கடவுளர்களின் ஐம்பொன்னினால் செய்யப்பட்ட விக்கிரகங்ள் திருடப்பட்டு தந்திரமான முறையில் குடாநாட்டுக்கு அப்பால் கடத்தப்பட்டு விற்பனை செய்யப்படுவது குறித்து இந்துக்கள் கவலைகொள்ளாமல் இருக்கமுடியாது.

எனவே, குடாநாட்டிலுள்ள இந்து ஆலயங்களில் இருக்கக்கூடிய விலைமதிப்புள்ள விக்கிரகங்களையும் ஏனைய சொத்துக்களையும் பேணிப் பாதுகாக்க ஆலய நிர்வாகங்கள் முன்னேற்பாடான முறையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-16)

# வடக்கில் முஸ்லிம்கள் மீளக் குடியமர தமிழ் மக்கள் ஒத்துழைக்க வேண்டும்

## ஜனநாயக முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

வட- பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்[illegible] திரும்புவதற்கு தமிழ் மக்கள் பூரண ஒத்துழைப்புத் தர[illegible]ண்டும் என்று இலங்கை ஜனநாயக முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

முஸ்லிம் மக்கள் மீளக்குடியேறுவதற்கு தமிழ்சிவில் அமைப்புக்கள் முயற்சி எடுக்கவேண்டும்.

அத்துடன் இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் வடபகுதியில் மீளக்குடியேறுவதற்கு அரசாங்கமும் தேவையான வசதிகளை வழங்கி பாதுகாப்பு வழங்கவேண்டும்.

இவைதவிர சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் மக்கள் தனித்தரப்பாக கலந்துகொள்வதைத் தடுக்க சிலர் முயற்சிப்பதாகவும் அந்த முயற்சியை சம்பந்தப்பட்டவர்கள உடனடியாக கைவிடவேண்டும் எனவும் முன்னணி கேட்டுள்ளது. (க-121)

## தினசரி தியானம்

# விவேகச் சிந்தனைகள்

நாம் சுதந்திரமாக இருக்கவேண்டும். எப்போதாவது இதைப் பயிற்சி செய்து பாருங்கள்... தியானத்தில் இந்த இயற்கையைக் காண நேரத்திற்கு நீங்கள் மாற்றமுடியும். இந்த சக்தி உங்களுக்குக் கிடைத்தால் அதுவே சொர்க்கம் ஆகாதா? முக்தி ஆகாதா? தியானத்தின் சத்தி அதுதான்.

சுவாமி விவேகானந்தர்

# கடத்திச் செல்லப்பட்ட இலங்கையரை உடனடியாக விடுதலை செய்யுங்கள்!

## குவைத்திலுள்ள முகவர் நிலையம் கோரிக்கை

(கொழும்பு)

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டு பணயம் வைக்கப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த தினேஷ் தர்மேந்திரா ராஜரட்ணத்தை உடனடியாக விடுவிக்குமாறு குவைத்திலுள்ள முகவர் நிலையம் சம்பந்தப்பட்ட தீவிரவாத அமைப்பைக் கோரியுள்ளது.

இதேவேளை, தன்னை ஈராக்கிற்கு செல்லுமாறு குவைத்தில் உள்ள முகவர் நிலையம் வற்புறுத்தியதினாலேயே தாம் ஈராக்கிற்குச் சென்றதாக தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட தினேஷ் தர்மேந்திரா ராஜரட்ணம் இறுதியாக மனைவிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

முதலில் தான் ஈராக்செல்ல மறுத்த போதும், அங்கு செல்லாவிட்டால் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவேன் என்ற அச்சம் காரணத்தினாலேயே தான் ஈராக் சென்றதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் தினேஷ் தர்மேந்திரா ராஜரட்ணத்தை விடுவிக்க தனியானதொரு பிரதிநிதியை இலங்கை அரசாங்கம் நியமித்திருக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# கொழும்பில் தமிழ் இளைஞன் அடித்துக்கொலை

கொழும்பில் 18 வயதுடைய சொக்கலிங்கம் தினேஷ்குமார் என்ற பாடசாலை மாணவன் இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார்.

ஸ்ரீபராக்கிரமபாகு மகா வித்தியாலய மாணவனான இவரது சடலம் புல்லர்ஸ் ஒழுங்கையில் கால்வாயொன்றிற்குள் நேற்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கறுவாக்காட்டு பொலிசார் இந்த கொலை தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றார்கள். (121)

# நேற்று மேலும் ஒரு இலங்கையர் ஈராக்கில் கடத்தல்

நேற்று ஈராக் தலைநகர் பக்தாத்தின் அல்-மன்சூர் பகுதியில் வைத்து மேலுமொரு இலங்கையர் தீவிரவாதிகளால் பிடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஒரு அமெரிக்கர், இரு அரபுக்கள் மற்றும் ஒரு இலங்கையர் என நான்குபேர் பக்தாத்தில் வைத்து பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர். இச் சம்பவத்தின் போது இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் ஒரு காவலாளியும், ஒரு கடத்தல்காரரும் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது. (121)

## முத்தையா...

லாளர்களை அவர் சந்தித்துக் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

அங்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில், தான் எப்போதும் அரசியல் நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டவர் என்றும், சகல இலங்கை மக்களினதும் சுபீட்சவாழ்வைக் கருத்திற்கொண்டே உலக உணவு அபிவிருத்தித் திட்டத்தின் இணைப்பாளர் பதவியை ஏற்றதாகவும் தெரிவித்தார்.

இன, மத, மொழி பேதமின்றி தனது பணி எந்த நேரத்திலும் தொடரும் என்றார். தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை சந்தித்து உரையாட ஆவலாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இன்று கிளிநொச்சி விஜயம் செய்யும் முரளிதரன் விடுதலைப் புலிகளின் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(த-19, 05,43,122)

# கோயிலாக்கண்டியில் ஆணின் சடலம்

(கோயிலாக்கண்டி)

சாவகச்சேரி கோயிலாக்கண்டித்துறையில் ஆண் ஒருவரின் சடலம் காணப்படுவதாக தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று மாலை 5.30 மணியளவில் கடலில் சடலம் மிதந்துகொண்டிருந்ததாகவும் இதனையடுத்து மாலை 6.30 மணியளவில் ஏனைய மீனவர்களின் உதவியுடன் சடலத்தைத் தேடிக் கண்டுபிடிக்க முயன்றபோதும் பொழுதுசாய்ந்துவிட்டதால் அது கைகூடவில்லை என்றும் தெரியவருகிறது.

மேற்படி சம்பவத்தை அடுத்து கோயிலாக்கண்டியில் நேற்றிரவு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

(த-129)

# காத்தான்குடியில் ஊரடங்கு நீக்கம்

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களையடுத்து அப்பிரதேசத்தில் நேற்று முன்தினமிரவு 7 மணிமுதல் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 6 மணியுடன் நீக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த வன்முறைச் சம்பவங்களின்போது கத்திக்குத்து மற்றும் வாள்வெட்டு போன்ற தாக்குதல்களுக்கு இலக்கான 14 வயது சிறுவன் உட்பட 5 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

தற்போது அப்பிரதேசத்தில் பூரண அமைதி நிலவுகின்றது. வீதிகளிலும், பொது இடங்களிலும் பொலிஸாரும், இராணுவத்தினரும இணைந்து கூட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். (ற)

# வன்முறையில் ஈடுபடுவதில்லை; சமாதான மாநாட்டில் தீர்மானம்

காத்தான்குடியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து நடைபெற்ற சமாதான மாநாட்டில் இனிமேல எதுவித வன்முறைகளிலும் ஈடுபடப்போவதில்லையென இணக்கம் காணப்பட்டுள்ளது. காத்தான்குடி மீராபாலிகா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த சமாதான மாநாட்டில் காத்தான்குடி பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்கள், சம்மேளனங்களின் பிரதித் தலைவர் தலைமையில் 25 பேரும், ரவூப் மௌலவி சார்பான எட்டுப் பேரும் கலந்துகொண்டனர்.

இங்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி இருதரப்பினரும் வன்முறையில் ஈடுபடக் கூடாது எனவும், இதனை கடைப்பிடிக்க தவறின் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுப்பர் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதனையடுத்து மேற்படி தீர்மானம் அனைத்து பள்ளிவாசல்களிலும் ஒலிபரப்பப்பட்டன. இதேவேளை பள்ளிவாசல்களுக்கு பொலிஸ், இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

(ற)

## மின்சாரம்...

வலது கையில் கண்ணாடிக் கீறல் காயங்களும், மற்றவரது விரல்களில் சிறு காயங்களும் காணப்படுவதாக ஆரம்ப பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

பிரஸ்தாப நபர்களுடன் பெண் ஒருவரும் கூடச்சென்றுள்ளார். சம்பவ நேரம் வீட்டின் பிரதான மின் ஆழியை நிறுத்துமாறு அப்பெண் கூக்குரல் இட்டதாக வீட்டுக்காரர் தெரிவிக்கின்றனர். பிரஸ்தாப நபர்கள் இருவரும் உயிரிழந்ததை அடுத்து சம்பந்தப்பட்ட பெண் ஆட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தி சடலங்கள் இரண்டையும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்ல முயற்சிசெய்துள்ளார்.

எனினும் சம்பவ இடத்திற்கு வந்த ஆட்டோ உரிமையாளர் சடலங்கள் இரண்டையும் அவதானித்ததும் அவற்றை ஆட்டோவில் ஏற்றுவதற்கு மறுத்துவிட்டார்.

இதனால் காலைவரையும் அவ்விடத்திலேயே சடலங்கள் கிடந்தன. மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் மரணவிசாரணைகளை மேற்கொண்டார். அதேவேளை சம்பவத்துடன் தொடர்புபட்டதாகக் கருதப்படும் இருவரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (ப-16,19)

## இந்திய....

யாடினார். இச்சந்திப்பின்போது இருதரப்பின் இராணுவநலன்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

நேற்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை அவரது அமைச்சு அலுவலகத்தில் சந்தித்த இந்திய இராணுவத் தளபதி சுமார் அரைமணி நேரம் இலங்கை விவகாரம் குறித்துக் கலந்துரையாடினார்.

அத்துடன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமராவையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இன்றைய தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, முப்படைகளின் பிரதம அதிகாரி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப்படைத் தளபதி டொனால்ட் பெரேரா மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளார்.

இதேவேளை, நாளைய தினம் அவர் அனுராதபுரத்திற்கும், வவுனியாவில் அமைந்துள்ள இராணுவத் தளங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-121)

## ஆளுநரின்...

அமைப்புக்களின் ஒன்றியம், மாவட்டக் கூட்டுறவுச் சபை மற்றும் யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் என்பன ஆளுநருக்குப் பல கடிதங்களை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆளுநர் யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ப-16)

# புலிகளுடன் சமாதானப்...

கட்சி, ஈ.பி.டி.பி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மக்கள் ஐக்கிய முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாற்றுக் குழு ஆகியன கலந்துகொண்டன.

இக்கூட்டத்தை ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய, மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணி ஆகியன பகிஷ்கரித்தன.

கூட்டத்தில் ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வுகாண குறிப்பிட்டளவு அதிகாரப்பகிர்வு அவசியமானது.

விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும்போது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் கருத்துக்களை கேட்டறியும் நோக்கிலேயே சமாதானத்திற்கும், தேசிய நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனை சபை ஸ்தாபிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும். இதன்போது முன்வைக்கப்படும் யோசனைகள் உண்மையில் அரசாங்கத்துக்கு அழுத்தத்தினைக் கொடுக்குமானால் இவ் ஆலோசனை சபை விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு எவ்விதத்திலும் தடையாக அமையாது.

அனைத்து அரசியல் கட்சிகளினதும் கருத்துக்களைத் தெரிந்துகொள்ள இவ்வாறான ஆலோசனை சபை எமக்கு உதவியாக இருக்கும்.

எனினும், விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் வேறாகவே முன்னெடுத்துச் செல்லப்படும்.

இத்தேசிய ஆலோசனை சபையில் அரசியல், சமயம், சிவில் சமூகம் என மூன்று உபகுழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ் உபகுழுக்களிடையே நடாத்தப்படும் பேச்சுவார்த்தைகள் தேசிய ஆலோசனைசபையில் விரிவாக விவாதிக்கப்படும்.

வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு யுத்தம் தீர்வாக இருக்காது. விடுதலைப் புலிகளுடன் ஒரேசமயத்தில் கருத்துப் பரிமாற்றம் இடம்பெறும்.

பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாணும் பொருட்டு தீர்வு ஆழமாகப் பரிசீலிக்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும் தெரிவித்தார்

(இ-121)

# அரசாங்கம் முஸ்லிம் மக்கள்...

தமது கட்சி திடசங்கற்பம் பூண்டிருப்பதாகவும், விரைவில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படும் அரசியல்யாப்பு சபை தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பில் 5 லட்சம் முஸ்லிம்களின் வாக்கை அரசு இழப்பது உறுதியாகிவிட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆளும் கட்சிக்கு ஆதரவு வழங்கிவரும் தமது கட்சியைச் சேர்ந்த 3 பாராளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம் சமூகத்தின் துரோகிகள் என ஹக்கீம் கூறினார்.

சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களினது தனித்தரப்பிற்கு இடமளிக்கப்படுவது பற்றி ஜனாதிபதி கொள்கையளவில் தங்களிடம் இணக்கம் தெரிவித்திருப்பதாக அவர்கள் கூறிவருகின்றார்கள்.

அந்த தனித்தரப்பு சரி வராது. அப்படி வழங்குவது பல சிக்கல்களை ஏற்படுத்தும் என ஜனாதிபதி எழுத்து மூலம் ஏற்கனவே அறிவித்துள்ளார் என்றும் ஹக்கீம் கூறினார்.

உத்தேச அரசியல் யாப்பு நிர்ணய சபை தொடர்பான வாக்கெடுப்பில் கையை உயர்த்துவோம் என்ற உடன்படிக்கையின் கீழேயே இந்த மூவருக்கும் அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் ரவூப் ஹக்கீம் குற்றம் சுமத்தியுள்ளார்.

(ச-121)

# அரசிடமிருந்து நல்ல...

மக்களுக்கு நன்மையளிக்கவில்லை. இதன் காரணமாக மக்கள் சமாதானத்தில் நம்பிக்கை இழந்துள்ளார்கள் என்றும், இன்றைய சந்திப்பில் தான் சுட்டிக்காட்டியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள தன்னாட்சியுள்ள இடைக்கால நிர்வாக அடிப்படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு தெற்கில் பல அரசியல் கட்சிகள் ஆதரவு வழங்க முன்வந்துள்ள சூழ்நிலையை ஜனாதிபதி சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதையும் தாம் வலிறுத்தியதாக கூறினார்.

நேற்றைய சந்திப்பில் ஜனாதிபதியிடமிருந்து ஆக்கபூர்வமான செய்திகள் எதுவும் ஜப்பானிய பிரதிநிதிகளால் கொண்டுவரப்படவில்லை. வழமைபோல் அரசாங்கமும் ஜனாதிபதியும் கூறும் தகவலைத்தான் கொண்டுவந்திருந்தார்கள். இத்தகவல்கள் ஜப்பானிய பிரதிநிதிகளுக்கு புதிதாக இருக்கலாம். ஆனால் எமக்கு பழைய கதை.

அரசாங்கம் பதவிக்குவந்த நாள்முதல் அறிக்கை விடுகின்றதே தவிர ஆக்கபூர்வமாக எதுவும் எடுத்ததாக இல்லை. பேச்சுவார்த்தைக்கு அடித்தள முயற்சிகள் எதுவும் எடுக்காத நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தையை எப்படி ஆரம்பிக்கமுடியும்? கேள்வியொன்றிற்கு பதிலளித்த அவர், 25 வருடகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உடனடியாக அவசர மனிதாபிமான பணிகள் தேவைப்படுகின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளும் விரைவில் ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை தென்படுவதாக இல்லை. இதன் காரணமாகவே விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அவசர மனிதாபிமான பணிகளுக்கு ஜப்பான் நேரடியாக உதவ வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளோம் என்றார்.

கொழும்பில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பௌத்த சிங்கள பேரினவாதக் கட்சிகளும், ஓரிரு தமிழ்க் கட்சிகளும் இணைந்து சம்மேளனம் ஒன்றை ஆரம்பித்திருப்பது பற்றி கருத்து வெளியிட்ட தமிழ்ச்செல்வன்,

சமாதானத் தீர்விற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும்போது இத்தகைய அமைப்புகள் உருவாகுவது வழமையானது. இதனைப்பற்றி பெரிதுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை. இருப்பினும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் இந்த அமைப்புகளுக்கு சாதகமாக இருக்கலாம் என்றார்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன், துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் பா.நடேசன் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாஷியுடன், இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அக்கியோ சூடா மற்றும் வெளிவிவகார அமைச்சின் இராஜதந்திரிகள் இருவர் கலந்துகொண்டார்கள். (இ-121)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.11.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.